பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 23 சனிக்கிழமை 09.11.2019 கதிர் 04

**இனி இது ரகசியம் அல்ல!**

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தைத் தமிழ்க் கூட்டமைப்புஎடுத்துவிட்டது.தமிழர்களும் வேறு வழியின்றி அவருக்கு வாக்களிக்கும் தீர்மானத்தையே எடுக்கக் கூடும்.

ஆனால், அதற்குப் பின்னால் புதைந்து கிடக் பக்கம் 02

# பாதுகாப்பு அமைச்சரானால் கோட்டாவை போல் தண்ணீர் கேட்டவர்களைச் சுட்டுத்தள்ளமாட்டேன்

## யாழ்ப்பாணத்தில் பொன்சேகா பரபரப்புப் பேச்சு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.09

சஜித்தின் புதிய அரசில் பாதுகாப்புஅமைச்சைப்பொறுப்பேற்ற பின்னர் இராணுவத்தை வைத்து, தண்ணீர் கேட்டவர்களையும், மண்ணெண்ணெய் கேட்டவர்களையும்சுட்டுத்தள்ளமாட்டேன். உங்கள் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான ஒரு நாட்டைஉருவாக்கித்தருவேன்.

– இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் வைத்து தெரிவித்தார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. பக்கம் 03



## குதிரை வண்டிலில் ஊர்வலமாக அழைத்து சஜித்துக்கு வரவேற்பு



யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் தேர்தல் பிரசாரத்துக்காக வந்த புதிய ஜனநாயக முன்னணியின் பக்கம் 02

# தீர்வு குறித்து வடக்கில் மௌனம் காத்த சஜித்

## அபிவிருத்தி குறித்தே அதிகம் பீற்றினார்

யாழ்ப்பாணம், நவ. 09

தேர்தல் பிரசாரத்துக்காக நேற்று வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தான் பங்குகொண்ட மூன்று கூட்டங்களிலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து வாயே திறக்கவில்லை. மௌனம் காத்தார்.

மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நேற்று நடந்த 3 பிரசாரக் கூட்டங்களிலும் உரையாற்றிய சஜித் பிரேமதாஸ அரசியல் தீர்வு குறித்து எதுவுமே கூறவில்லை. ஆனால் வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அவர் அதிகம் பீற்றினார். பக்கம் 02



## சமாதானப் புறாவை பறக்கவிட்டார் சஜித்




யாழ்ப்பாணம், நவ.09

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பக்கம் 03


## எத்தடை வரினும் மாவீரர் நாள் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும்!

### துயிலுமில்லப் பணிக்குழு அறிவிப்பு



முல்லைத்தீவு, எந்தத் தடை வந்தாலும்மாவீரர்நாள்அனுஷ்டிக்கப்படும் என அறிவித்துள்ள தேராவில் துயிலு பக்கம் 03

## நவீன ராணுவத் தலைமையகத்தை நேற்றுத் திறந்து வைத்தார் மைத்திரி



கொழும்பு, நவ. 09

நவீன வசதிகளுடன் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவத் தலைமையகம் பக்கம் 03

## மன்னார் ஆயரை சந்தித்தார் சஜித்



மன்னார், நவ.09

தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக நேற்று மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டபுதிய ஜனநாயகக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர்சஜித்பிரேமதாஸ மன்னார் பக்கம் 02

## அபிவிருத்தியில் யாழ்ப்பாணம் முன்னிலை பெறச் செய்வேன்!

### நல்லூரில் வைத்து சஜித் உறுதிமொழி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.09

தமிழ்சிங்கள,முஸ்லீம் என்ற இனமதபேதம்இல்லாமல் ஒரே குடையின் கீழ் ஒரு தாய் மக்களாக ஒரே சட்டத்தின் வாழும் அமைப்பை நிச்சயமாக உருவாக்குவேன். வடக்கு-கிழக்கில் சர்வதேச மாநாடு களை நடத்துவேன். அபிவிருத்தியில் முன்னிலையானமாவட்டமாக யாழ். மாவட்டத்தை உருவாக்குவேன்.

இவ்வாறுகுறிப்பிட்டார் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பக்கம் 03

## துயிலுமில்லச் சிரமதானப் பணியில் ஈடுபட்டோருக்கு ராணுவம் மிரட்டல்!



அம்பாறை, நவ. 09

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில்நேற்றுக் காலை சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அங்கு வந்த இராணுவத்தினர் துப்பரவுப் பணிகளை பக்கம் 03

## கோட்டாவின் மேடையில் வசந்த சேனநாயக்க எம்.பி.



கொழும்பு, நவ. 09

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்வசந்த சேனநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தனது ஆத பக்கம் 03

# தன் ஆட்சியில் 8000 ஏக்கர் நிலத்தை அமெரிக்காவுக்கு விற்றவர் மஹிந்த

## அனுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 09

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 8000 ஏக்கர் காணிகள், அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

அனுராதபுரவில் நேற்று முன்தினம் தேர்தல் பரப்புரைப் பேரணியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவுடனான எம்.சி.சி உடன்பாட்டுக்கு எதிராக இருப்பது போன்று பாசாங்கு செய்யும் மஹிந்த ராஜபக்ஷ, சோமாவதிய வில் 5,000 ஏக்கர் நிலத்தையும், பெல்வத்தையில் 2000 ஏக்கர் நிலத்தையும், இகினிமிட்டியாவில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தையும் அமெரிக்க நிறுவனங்களுக்கு குத்தகைக்கு கொடுத்தவர்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பஸில், கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, கற்பிட்டியில் உள்ள 14 தீவுகளை விற்பதற்குத் திட்டமிட்டிருந்தார். அவற்றில் இரண்டு தீவுகள், இந்திய மற்றும் டென்மார்க் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன என்றார். (ஐ)

# யாழ்.ரயில் நிலையத்துக்கு அருகே மருத்துவரின் வீடு மீது தாக்குதல்!

## வாகனமும் தீக்கிரையாக்கப்பட்டது



யாழ்ப்பாணம்,

யாழ். ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள சித்த மருத்துவர் ஒருவரின் வீட்டுக்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த ரவுடிக் கும்பல், வீட்டை அடித்து நொருக்கியதுடன் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தையும் தீ வைத்து எரித்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

வீட்டார் கொழும்பு சென்றிருந்த நிலையில் வீட்டுக்குள் நுழைந்த ரவுடிக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

இதன்போது வீட்டின் கதவு, ஜன்னல் உட்பட வீட்டிலிருந்த பொருட்களை அவர்கள் அடித்து நொருக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தையும் தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர்.

வாகனம் பற்றி எரிவதை அவதானித்த அயல் வீட்டுகாரர்கள் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர்களுக்குத் தகவல் தெரிவித்ததோடு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கும் அறிவித்தனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்.மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனாலும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் முழுதாக எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ஐ-07)

## தீர்வு குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அவர் தனது பிரசார உரைகளில் தான் ஜானாதிபதியாக வந்தால் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி மாத்திரமே குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒவ்வொரு கைத்தொழில் பேட்டைகள், முன்பள்ளி கல்வி அபிவிருத்தி, விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாக உரம் வழங்கல், கடற்றொழில் அபிவிருத்தி, கலாசார மண்டபம் அமைத்தல், உள்ளிட்ட அபிவிருத்தி திட்டங்களைமேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவித்த அவர், நாட்டில் உள்ள அனைத்து மக்களும் இனம் மதம் மொழி பேதங்களை கடந்து ஒற்றுமையாக வாழத் தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அரசியல் தீர்வு பற்றியோ, அரசியல்கைதிகளின் விடுதலைப் பற்றியோ, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயம் குறித்தோ, நிலம் உள்ளிட்ட தமிழ் மக்களின் மிக முக்கிய பிரச்சினைகள் பற்றியோ அவர் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில்– தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அவர் இவ்வாறு மெத்தனப் போக்கைக் கொண்டுள்ளமை குறித்து கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டங்களில் அமைச்சர்களான மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், விஜயகலா மகேஸ்வரன், சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஆபத்து ஒன்றைப் பற்றி முற்கூட்டியே எச்சரிப்பது அவசியம் என்று நினைக்கின்றேன்.

ராஜபக்ஷக்களை எதிர்ப்பது என்பது சில சமயங்களில் தமிழர்களைப் பொறுத்தவரை சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதையாகி விடக்கூடும்.

சம்பந்தனும், சுமந்திரனும், அவரது அணியினரும் இப்போதே கவனித்துத் திருத்த வேண்டிய முக்கிய விடயமாக நான் இதனைக் கருதுகின்றேன்.

2018 ஒக்டோபரில் நடைபெற்ற அரசியல் சதிப்புரட்சி நமக்குத் தெரிந்துதான். அதிகாரத்தில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தாம் வீட்டுக்கு அனுப்பி விட்டார் என்று கூறிக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷவைப் பின்கதவால் கூட்டி வந்து பிரதமராக்கினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அந்த அரசமைப்பு அத்துமீறலை உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று நீதியை நிலைநாட்டச் செய்தவர் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

இருக்கும் பிரதமரை அப்படி வீட்டுக்கு ஜனாதிபதி அனுப்ப முடியாது, அதற்கு சட்டத்தில் இடமில்லை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அந்தச் சமயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிரேஷ்ட ஆலோசகராகவும் இணைப்புச் செயலாளராகவும் இருந்தவர் சிரால் லக்திலக.

செத்த நாயில் உண்ணி தானாகக் கழரும் என்று இப்பந்தியில் ஏற்கனவே நான் கூறியிருக்கின்றேன்.

மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் இன்னும் ஒரு வாரம்தான். சிரால் லக்திலக போன்றோர் இப்போது மைத்திரியுடன் இல்லை.

இப்போது அவர் சஜித் பிரேமதாஸவின் ஆலோசகராம்!

தான் ஜனாதிபதியானதும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெறுபவர் எனத் தாம் கருதும் புதியவர் ஒருவரைப் பிரதமராக நியமிப்பேன் என்று சஜித் பிரேமதாஸ அறிவித்துப் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருபக்கின்றமை தெரிந்ததே.

அப்படி அவர் செய்ய முடியாது – அரசமைப்பு ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் புதியவர் ஒருவரை, புதிய ஜனாதிபதி தம்பாட்டில் பிரதமராக நியமிக்க முடியாது.

அப்படி நியமிப்பதாயின் அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதற்கு முன்னர் பதவியில் இருக்கும் பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றச் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் இருக்கும் பிரதரின் அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலாவது அவருக்கு எதிரான பிரேரணை ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

இது இரண்டும் செய்யாமல் அதிகாரத்தில் இருக்கும் பிரதமரை வீட்டுக்கு புதிய ஜனாதிபதி அனுப்புவதோ, புதிய பிரதமரை அவர் நியமிப்பதோ சட்ட ரீதியாகக் சாத்தியமற்றதாகும்.

2018 ஒக்டோபரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கயிறு கொடுத்து அந்த அரசியல் சதிப்புரட்சிக்குத் தூண்டியவர்களுள் பிரதானமானவர் என்று கருதப்படும் சிரால் லக்திலக, இப்போது சஜித் பக்கம் போய் நின்று கொண்டு, முன்னர் மைத்திரியைத் தூண்டியமை போல இப்போது சஜித்துக்கும் கயிறு கொடுக்கின்றாரோ என்று கொழும்பு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

நேற்றும், முன்தினமும் அரச வானொலி மற்றும் தொலைக் காட்சி நிலையங்களுக்குப் போய், பதவியில் இருக்கும் பிரதமரை வீட்டுக்கு அனுப்பி விட்டு வேறு ஒருவரை நியமிக்கும் சட்ட அதிகாரம் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்பவருக்கு உண்டு என்ற சாரப்பட குதர்க்க நியாயம் அவர் பேசிக்கொண்டிருக்கின்றார்.

அதை நோக்கும் போது 2018இல் ஜனாதிபதி மைத்திரியைக் கொண்டு செய்வித்தமை போல இப்போது 2019 நவம்பர் 16 இற்குப் பின்னர் சஜித்தைக் கொண்டும் ஒரு சட்டவிரோத சதிப்புரட்சியை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் திரைமறைவில் கட்டவிழ்த் தொடங்கி விட்டனவோ என்ற சந்தேகம் வருகின்றது.

சட்ட விரோதமான முறையில் பிரதமர் ரணிலைப் பதவியில் இருந்து துரத்தி விட்டு, சம்பிக்க ரணவக்க போன்ற பௌத்த, சிங்களத் தீவிரப் போக்குடையவரைப் பிரதமராக்கும் சிந்தனை சஜித் பக்கத்தில் இருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற முறையில் அக்கட்சியினது எம்.பிக்கள் மற்றும் அதனோடு சேர்ந்து அரசு அமைத்திருக்கும் பங்காளிக் கட்சிகளின் எம்.பிக்கள், மேலும் கூட்டமைப்பு எம்.பிக்களின் ஆதரவைப் பெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் குழுவிலோ அல்லது நாடாளுமன்றத்திலோ நிறைவேற்றப்படும் பிரேரணை மூலம் வீட்டுக்கு அனுப்புவது இலேசான காரியமல்ல.

கோட்டாபாய, சஜித் யார் ஜனாதிபதியானாலும் அது உடனடியாகச் சாத்தியமாகக் கூடிய விடயமேயல்ல.

அப்படியாயின், 2018 ஒக்டோபரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்தமை போன்ற ஓர் அரசியல் சதிப்புரட்சியைத் தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் சஜித் முன்னெடுத்துத்தான் ரணிலை அவர் அகற்றமுடியும் என்று கருத இடமுண்டு.

கோட்டபாயவை நிராகரித்து சஜித்தை ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த பல காரணங்களில் முக்கியமானது ராஜபக்ஷக்கள் சட்டத்தையும், அரசமைப்பையும் மீறிச் செயற்படும் ஆபத்தானவர்கள் என்பது. சஜித் அப்படிக் செய்யமாட்டார் என்பது தான் கூட்டமைப்பின் நம்பிக்கை.

ஆனால், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முன்னரே – ஜனாதிபதியாக முன்னரே – தான் ஜனாதிபதியானால், புதிய பிரதமரைத் தன்பாட்டில் நியமிப்பார் என்று – அரசமைப்புக்கு முரணாகக் செயற்படுவேன் என்று – பகிரங்கமாய் அறிவித்துப் பீதியைக் கிளப்புகின்றார் சஜித்.

அப்படி அரசமைப்பை மீறும் நடவடிக்கையை நேரத்துடனேயே அப்பட்டமாக அறிவித்து, முன்னெடுக்கப் போகும் சஜித்தை நம்பித் தமிழர்கள் வாக்களிக்கலாமா?

அப்படி அவர் அரசமைப்பை மீறி நடந்து கொண்டால் அதற்கு எதிராகவும் சுமந்திரன் நீதிமன்றுக்குப் போவாரா?

மைத்திரி – ரணில் நல்லாட்சி அரசை அதிகாரத்துக்கு கொண்டு வந்தவர்கள் நாங்களே என்று மயிர்தட்டிக்கொண்டிருந்த கூட்டமைப்பு சுமார் நான்கு வருடங்களின் பின்னரே, தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அவர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று புரணி பாடும் நிலைமை ஏற்பட்டது.

ஆனால், இம்முறை சஜித்தை ஆதரித்து, அவரைக் கொண்டு வந்தால், அவர் பதவிக்கு வந்ததுமே அரசமைப்புக்கு மாறாக நடக்கும் அவரது எத்தனத்துக்கு எதிராக சுமந்திரனும் கூட்டமைப்பினரும் உயர்நீதிமன்றுக்குப் போய், ஆரம்பத்திலேயே உறவு தெறிக்கும் நிலைமை வந்துவிடுமோ என்று கவலைப்படும் சூழ்நிலை இல்லாமல் இல்லை.

எது, எப்படி என்றாலும் கூட்டமைப்பின் ஆதரவு சஜித்துக்கே என்ற உத்தியோகபூர்வ நிலைப்பாடு நேற்று முன்தினம் காலையில் கூட்டமைப்பினால் அறிவிக்கப்பட்ட கையோடே, இருக்கும் பிரதமரின் இடத்துக்குப் புதியவரை நியமிப்பேன் என்ற – அரசமைப்பை மீறிச் செயற்படப் போகின்றன் என்ற – சஜித்தின் அறிவிப்பு வந்திருக்கின்றது.

இது தொடர்பில் சட்டரீதியான நிலைமைகளைத் தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகக் கூற வேண்டிய கடப்பாடு சுமந்திரனுக்கு உண்டு.

நேற்று வடக்கே வந்த சஜித், இங்கு தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த விடயம் குறித்து எதுவுமே பேசவில்லை. இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தனது திட்டம் குறித்து அவர் மூச்சே விடவில்லை. அபிவிருத்தி என்று தமிழர் காதில் பூச்சுற்றி விட்டுப் பறந்து விட்டார்.

இனப்பிரச்சினைக்கு நேர்மையான – நியாயமான – நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய –தீர்வு ஒன்றைத் தருவதில் தென்னிலங்கைத் தரப்புகளுக்காகப் பயந்து மௌனம் காத்து, அடங்கிப் போகும் சஜித், அதிகாரத்துக்கு வந்தாலும், தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கதரிசனத்தோடு நோக்கி, துணிச்சலோடு தீர்வைத் தரக்கூடிய ஒரு தலைவர் என்று தோன்றவேயில்லை.

இன்னொரு தடவை தமிழினம் ஏமாறுவதற்கு அடித்தளம் போடுகின்றார்கள். அவ்வளவு தான்.

–மின்னல்–

## குதிரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவைக் குதிரை வண்டிலில் உட்கார வைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர் ஐ.தே.க ஆதரவாளர்கள்.

யாழ்.சங்கிலியன் பூங்காவில் நடந்த தேர்தல் பிரசாரத்திற்கு முன்தாக, அங்கு அவர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். இதன் போது மங்கள வாத்தியங்கள் முழங்க, பெருமளவான ஐ.தே.க அதரவாளர்களும் ஊர்வலமாகச் சென்றனர். (ஐ-07)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை அவர் ஆயர் இல்லத்தில் சந்தித்தார்.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனும் உடனிருந்தார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir
சனிக்கிழமை 09.11.2019


## எந்தத்தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மில்லப் பணிக் குழு, உறவுகளை அஞ்சலிக்க அனைவரையும் வருமாறு அழைப்பு விடுத்துள் ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணிகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்வுகளை ஒட்டி தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணிகளில் மக்கள், சமூக மட்ட அமைப்புக்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 27ஆம் திகதி எந்தவித அச்சங்களும் இன்றி அனைத்து மக்களையும் மாவீரர்களை நினைவுகூர வருமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் பணிக்குழுத் தலைவர் ஈசன் தெரிவிக்கையில்,

எங்கள் மாவீரச் செல்வங்களின் மகத்தான நினைவு நாள் நவம்பர் 27 இல் இடம்பெறவுள்ளது. இன்றைய அரசியல் சூழ்நிலையில் துயிலும் இல்லங்களில் நிகழ்வுகள் இடம்பெறுமா என்ற கேள்விக்கு மத்தியிலும் இந்த நிகழ்வை நிச்சயமாக கடைப்பிடித்தே தீருவோம் என்ற அயராத உறுதியுடன் செயற்படுகின்றோம்.

இது வீண்போகாது. நிச்சயமாக மாவீரர்களின் நினைவுநாள் கார்த்திகை 27 நடைபெற்றே ஆகும். அதற்கான சகல ஒழுங்குபடுத்தல்களையும் செயற்பாட்டுக்குழு ஆகிய நாங்களும் இங்குள்ள தாயக உறவுகள், புலம்பெயர் உறவுகள், பொது அமைப்புக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

வழமை போன்றே மாவீரச் செல்வங்களின் வழிபாட்டுத் தினமான கார்த்திகை 27 ஆம் திகதி நிகழ்வுகள் நிச்சயமாக நடைபெறும். தாயக விடுதலைப் போராட்டத்துக்கு தமது பிள்ளைகளை உவந்தளித்த பெற்றோர்கள், உறவினர்கள் தவறாது சமூகமளித்து உங்கள் பிள்ளைகளுக்குத் தீபங்களை ஏற்றி வணக்கம் செலுத்துமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம் என்றார். (ஐ)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரவை வழங்கியுள்ளார்.

பொலனறுவையில் நேற்று இடம்பெற்ற கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் தனது ஆதரவை வெளிப்படுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிக்கமுடியாது என்று வசந்த சேனநாயக்க அண்மையில் அவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே வசந்த சேனநாயக்கவைக் கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்பை அடுத்து, ஐ.தே.கவிலிருந்து கட்சி தாவி மஹிந்த ராஜபக்ஷவின் 52 நாள் அரசில் அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட வசந்த சேனநாயக்க பின்னர், ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பியிருந்தார்.

இந்தமுறை அவர் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவளித்துள்ளார். (ஐ)

## சமாதானப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வொன்றைப் பறக்கவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக சஜித் பிரேமதாஸ வடக்குக்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் அவர் கலந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாஸ யாழ்.சங்கிலியன் பூங்காவில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தின்போது சமாதானப் புறாவான வெள்ளைப் புறாவொன்றையும் அமைச்சர்கள் ஆதரவாளர்களுடன் இணைந்து சஜித் பறக்கவிட்டார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர்களான சரத் பொன்சேகா, ரிசாத் பதியூதீன், முன்னாள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உட்பட கட்சிப் பிரமுகர்களும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-07)

## நவீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டது.

தரைப்படை (இராணுவம்), கடற்படை மற்றும் விமானப் படை ஆகிய முப்படைப் பிரிவுகளின் தலைமையகங்களை ஒரே இடத்தில் அமைக்கும் நோக்கில் பெலவத்த அக்குரேங்கொட பகுதியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

77 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள அரச பாதுகாப்பு மற்றும் முப்படைத் தலைமையகத்துக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது.

இதற்காக 5300 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதுடன் அது இதுவரை இலங்கையில் அமைக்கப்பட்ட பெரும் கட்டட வேலைத்திட்டமாகவும் கருதப்படுகின்றது.

அதிநவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் நவீன பாதுகாப்பு முறைமையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் முப்படைத் தலைமையகம் மற்றும் காரியா லயப் பிரிவு ஆகியன நேற்று ஜனாதிபதியால் திறந்து வைக்கப் பட்டன.

இதற்கமைய நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள இராணுவ தலைமையகங்கள் அனைத்தும் ஒரே தலைமையகத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது.

இதன்மூலம் இராணுவத்துக்கு வாடகைக்குப் பெறப்பட்டிருந்த கட்டடங்களுக்காக மாதாந்தம் செலவிடப்பட்டுவந்த 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை மீதப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றும் கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி
புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டாவறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

நாங்கள் பத்து வருடங்களின் முன்னர் யாழ்ப்பாணம் வந்தபோது விசில் அடித்து அப்போது எம்மைப் பகிஸ்கரித்தார்கள். இப்பொழுது உங்களைப் பார்க்க என் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. முன்பு நாங்கள் பொதுமக்களுடன் கிட்டச் சென்று கலந்துரையாடச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. இப்பொழுது மக்களுக்கு அருகில் வந்து கலந்துரையாடுவது மகிழ்ச்சியாக உள்ளது.

இந்த மக்கள் சுதந்திரமாக நடமாடுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.

2019ஆம் ஜனாதிபதித் தேர்தல் சகல மக்களுக்கும் முக்கியமானது. நாடு முழுவதும் முக்கியமான தேர்தல் இது.

தேர்தலைப் பகிஸ்கரிக்கச் சிலர் ஒத்துழைப்பு வழங்கலாம். அதை நீங்கள் கணக்கெடுக்காமல் வாக்களிக்கவேண்டும். யுத்தத்தின் பின்னர் வடக்கு–கிழக்கு என்று இல்லை. அனைவரையும் ஒரே தாய் மக்களாகவே பார்க்கிறோம். இனியும் இந்த நாட்டில் இப்படியான யுத்தம் இடம்பெறாது. அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

மீன்பிடி கைத்தொழில், விவசாயக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் ஏற்பாடுகளைச் சஜித் செய்து தருவார்.

இங்கே சில வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். ராஜபக்ஷ சகோதரர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, தேர்தலைத் திசை திருப்ப முயற்சிக்கிறார்கள். உங்கள் வாக்குகளைப் போடாமல் செய்யவும் முயற்சிக்கிறார்கள். அதை நாங்கள் நிறுத்த வேண்டும்.

தெற்கில் ராஜபக்ஷ குடும்பம் மக்களை ஏமாற்றியுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்தினர் மக்களின் பணத்தைச் சூறையாடும் வேலையைத்தான் செய்கிறார்கள்.

நாங்கள் ஒருபோதும் உங்களுக்குப் பொய் சொல்லமாட்டோம். இயலாததை இயலாதென்றே கூறுவோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவன் என்ற வகையில் ஒன்றைச் சொல்கிறேன். வடக்கு, கிழக்கு, தெற்கு என அனைவரும் ஒரே தாய் பிள்ளைகளாகவே இருக்க விரும்புகிறேன்.

சஜித் ஜனாதிபதியானதும் எனக்குப் பாதுகாப்பு, நீதியமைச்சை வழங்குவதாகச் சொல்லியுள்ளார். அதை நான் மனதார ஏற்றுக்கொள்கிறேன். பதவியேற்றதும் நாடு தழுவிய ரீதியில் இன, மத, பேதமின்றி அனைவருக்கும் பாதுகாப்பளிக்கும் ஏற்பாட்டை நான் செய்வேன்.

நாட்டின் ஒற்றுமை, இறைமையை பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்வேன்.

ஊழல், மோசடிகளை இல்லாமல் செய்வோம். எந்த விதத்திலும் இராணுவத்தை வைத்து மக்களுக்கு வெடி வைக்கவோ, திசை திருப்பவோ இடமளிக்கமாட்டேன். கோட்டாபய ஈ.பி.எவ். கேட்டவர்களையும் சுட்டார், மண்ணெண்ணெய் கேட்டவர்களையும் சுட்டார். தண்ணீர் கேட்டவர்களையும் சுட்டார். அது எமது அரசில் ஒருபோதும் நடக்காது.

கோட்டாபயவின் அனைத்து விடயங்களுக்கும் முடிவு கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர் வழிநடத்தியவர்கள் வேறு திசைக்குச் சென்றுள்ளனர். இந்த யுத்தத்தை வழிநடத்தியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் –என்றார். (ஐ-07)

## துயிலுமில்லச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறுத்துமாறும், இல்லையேல் கைது செய்ய நேரிடும் எனவும் மாவீரர் குடும்பங்களை அச்சுறுத்தியுள்ளனர்.

நவம்பர் 27ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள மாவீரர் தின நிகழ்வுகளுக்கான முன்னேற்பாடுகளை முன்னிட்டுச் சிரமதானப் பணிகள் தாயகப் பகுதியில் உள்ள மாவீரர் துயிலும் இல்ல மீள் நிர்மாணிப்புக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை கஞ்சிகுடிச்சாறு, மட்டக்களப்பு , மாவடி முன்மாரி, தாண்டியடி ,வாகரை கண்டலடி திருமலை ஆலங்குளம், செம்மலை உள்ளிட்ட 7 மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகளை முன்னெடுக்க இருப்பதாக இந்தக் குழுவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்ல மீள்நிர்மாணிப்புக்குழுவின் தலைவரான குட்டிமணி மாஸ்டர் என்று அழைக்கப்படும் நாகமணி கிருஷ்ணபிள்ளை கூறுகையில்–

நவம்பர் 27 தாயக விடுதலைக்கான ஆகுதியான மாவீரர்களை நினைவு கூரும் முகமாக முன்னேற்பாடுகள் இந்த வருடமும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க இருப்பதனால் (நேற்று) சிரமதான பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் இராணுவம் அங்கு வந்து சிரமதானப் பணிகளை இடைநிறுத்தக் கோரினர். இல்லையேல் கைதுசெய்து கொண்டு செல்ல நேரிடும் என அச்சுறுத்திச் சென்றனர்.

அதன் பின்னர் இரண்டாவது தடவையாக அதே இராணுவத்தினர் சிரமதானப் பணியை மேற்கொள்ளும் அனைவரையும் புகைப்படம் எடுக்கவேண்டும் என்றும், அனைவரது சுயவிவரத்தையும் வழங்குமாறும் கோரினர். இதற்கு மறுப்புத் தெரிவித்தமையால் பின்னர் இவற்றைப் பதிவு செய்த ஊடகவியலாளரின் அடையாள அட்டையைப் பரிசோதனை செய்த பின்னர் புகைப்படம் எடுத்துக்கொண்டு சென்றனர். (ஐ)

## அபிவிருத்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி
பிரேமதாஸ.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ்.மாவட்டத்திற்கு வந்திருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை பிரச்சினைகள், தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். அதனூடாக அபிவிருத்தியில் முதன்நிலை மாவட்டமாக இந்த மாவட்டத்தை உருவாக்குவேன்.

ஏழ்மையினை நீக்குவதற்காக சமுர்த்தி வேலைத் திட்டமொன்று நாட்டில் நடைமுறையில் இருக்கிறது. இதனோடு இணைந்ததாக ஜனசவி திட்டத்தையும் வழங்கி ஏழ்மையை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கையை நான் மேற்கொள்வேன்.

இந்த நாட்டில் 44 இலட்சம் பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு இரண்டு இலவசச் சீருடையும் ஒரு பாதணியும் பகல் போசனமும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளேன்.

அதேபோல பாலர் பாடசாலையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்வேன். இப்போது பணம் செலுத்திதான் பாலர் பாடசாலைகளின் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. பாலர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு அரச சம்பளம் வழங்கப்படும். அதேபோன்று உப ஆசிரியர்களுக்கும் அரச சம்பளம் வழங்கப்படும். பாலர் பாடசாலைகளுக்கு விசேடமாக மண்டபங்களும் நிர்மாணிக்கப்படும். பாலர் பாடசாலைக் கல்வியை இலவசக் கல்வித் திட்டத்தோடு இணைத்துச் செல்வதற்கான நடவடிக்கையையும் மேற்கொள் வேன்.

விவசாயத் துறையைக் கட்டியெழுப்புவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். விசேடமாக நெல், சேனைப் பயிர்ச்செய்கை ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதற்கும் தேயிலை, இறப்பர், தென்னை என இவை அனைத்திற்கும் தேவையான பசளையை இலவசமாக வழங்குவேன்.

யாழ்ப்பாணத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தொழில் நுட்பக் கல்லூரி உருவாக்கப்படும். அதேபோன்று ஒரு தொழில் நுட்ப மையம், தொழில் நுட்ப பூங்கா என்பனவும் உருவாக்கப்படும். இந்த தொழில் நுட்பக் கல்லூரியின் மூலமாக இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற முடியும். அதனைப் போன்று தான் தகவல் தொழில்நுட்பம், ஆங்கில அறிவு என்பவற்றையும் இலவசமாக வழங்கக்கூடிய அமைப்பாக இதனை மாற்றி அமைத்து இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

இந்த மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழிலாளர்களுக்கும் பாரிய கைத்தொழில் திட்டங்களை மேற்கொள்பவர்களுக்கும் சலுகை அடிப்படையில் உதவிகளை வழங்குவோம். அதே போன்று யுத்தத்தின் காரணமாக தமது அவயங்களை இழந்த விசேட தேவையுடையவர்களுக்கு விசேட வேலைத் திட்டத்தை முன்னெடுப்பொம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக யாழ் மாவட்டம் உள்ளது. வடக்கு–கிழக்குக்கு வேறாக வெளிநாட்டு உதவித் திட் டங்களைக் கொண்ட வந்து அபி விருத்தியில் உச்ச கட்டத்தில் திக ழும் மாகாணங்களாக இந்த வடக்கு–கிழக்கு மாகாணங்களை மாற்றியமைப்போம்.

எனது கொள்கைப் பிரகடனம் புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது. அது உங்கள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஊடாக ஒவ்வொரு வீடுகளுக்கும் வந்து சேரும். அந்தப் புத்தகத்திலே எதிர்காலத்தில் என்னென்ன விடயங்களை இந்த நாட்டிலே நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கிறோம் என்பது உள்ளடங்கப்பட்டிருக்கிறது.

ஒருமித்த நாட்டில் இன, மத, கட்சி என்ற பேதமில்லாமல் அனைவரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற வேறுபாடு இல்லாமல் ஒரே குடையின் கீழ் ஒரு தாய் மக்களாக ஒரே சட்டத்தின் கீழ் வாழக்கூடிய அமைப்பை எதிர்கால அரசில் நான் நிச்சயமாக உருவாக்குவேன்–என்றார். (ஐ–7)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இவருக்கா தமிழர் வாக்கு?

'இது என்ன சின்னபிள்ளைத் தனமான இருக்கு?' – என்று ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு கேட்பார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் நடவடிக்கைகள் அப்படிப்பட்ட ஒரு வினாவையே நம்மனதில் ஏற்படுத்துகின்றன.

பிரதான வேட்பாளர்களில் சஜித் பிரேமதாஸ வயது குறைந்தவர்தான். ஆக 52 வயதே. எனினும் இவ்வளவு தூரம் பிரதான கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக உயர்ந்த பின்னர், இப்படி அரசியல் அறிவு முதிர்ச்சியின்றி – சிறுபிள்ளைத்தனமாக – அவர் நடந்து கொள்வார் என்பது கற்பனை பண்ணிப் பார்க்கத் தக்கதல்ல.

சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு நேற்றுமுன்தினம் காலையில் வெளியானது.

அது வெளியான கையோடு, சஜித் பிரேமதாஸ தமது ஊதுகுழலான தனியார் தொலைக்காட்சிக்குக் சென்றார். ஒரு நாட்டின் தலைவர் நாட்டு மக்களுக்கு செய்தி விடுப்பவர் போல – தலைவர் பிரபாகரன் வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவீரர் தின உரையை ஆற்றுவது போன்று – இலங்கைத் தேசியக் கொடிக்கு முன்னால் நின்று நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வென்றதும் புதிய ஒருவரைத் தாம் பிரதமராக நியமிப்பார் என்றும், ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானோருக்குத் தமது புதிய அமைச்சரவையில் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் பீற்றினார் அவர்.

தப்பித் தவறி சஜித்தோ, கோட்டாபயவோ யார் ஜனாதிபதியானாலும் இருக்கும் பிரதமரையும், அமைச்சரவையையும் மாற்றும் அதிகாரம் அந்தப் புதிய ஜனாதிபதிக்கு வெறுமனே வந்துவிடாது என்பது தெளிவான அரசமைப்பு விதிமுறையாகும். அதனைப் பல தடவைகள் இப்பத்தியில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் விவரித்து விட்டோம்.

ஆக, இருக்கும் பிரதமருக்கும், அமைச்சரவைக்கும் எதிராக நாடாளுமன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாதத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே – அதன் பின்னர் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெறுபவர் எனத் தாம் கருதும் ஒருவரைப் பிரதமராக நியமிக்கும் அதிகாரம் புதிய ஜனாதிபதிக்கு வரும்.

அரசமைப்பு ரீதியாகத் தமக்கு இல்லாத – தமக்குக் கைக்கே வரமுடியாத – ஓர் அதிகாரத்தைப் பிரயோகிப்பேன் என்று திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் சஜித் பிரேமதாஸ இரண்டு விடயங்களை வெளிப்படுத்துகின்றார்.

ஒன்று – இருக்கும் அரசமைப்பை மதிக்காமல் மிதித்து நடக்க அவர் தயாராகி விட்டார் என்பது.

இரண்டு – இந்தப் தேர்தல் அரசியலில் தமது தலையில் தாமே மண் அள்ளிப் போடும் அரசியல் சகுனித்தனத்தை தமக்கு எதிராக அவரே முன்னெடுக்கின்றார் என்பது.

தான் பதவிக்கு வந்ததும் புதிய பிரதமரை நியமிப்பேன் என்ற சஜித் பிரேமதாஸவின் அறிவிப்பு அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முற்றிலும் மீறிய – அரசமைப்பு ஏற்பாடுகளை காலால் மிதிக்கின்ற – ஒரு நடவடிக்கை என்பது கூட்டமைப்பின் பேச்சாளரும் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரனுக்கே விரிவாக – விளக்கமாக – தெரிந்த விடயம்.

இந்தத் தேர்தலில் கோட்டாவை நிராகரித்து, சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்திருக்கும் சுமந்திரனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதற்கான காரணங்களை விலாவாரியாக வரிசைப்படுத்தியுள்ளது.

அதில் அரசமைப்பையும் சட்டத்தையும் மதித்தல், எதேச்சாதிகாரப் போக்கில் நடந்து கொள்ளாமை என்பன முக்கிய அம்சங்களாகும். அவை கோட்டாவிடம் இல்லை, சஜித்திடம் உள்ளன என்று நம்பித்தான் சஜித்துக்குள் பின்னால் கூட்டமைப்பு போகின்றது என்பதை கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.

ஆனால், அந்த அறிக்கை எழுதிய மை காய்வதற்குள் அரசமைப்பில் தனக்கு இல்லாத அதிகாரத்தைத் தாம் ஜனாதிபதியானதும் பிரயோகிப்பார் என்ற சாரப்பட சஜித் மீண்டும் அறிவித்து, தெட்டத் தெளிவாக உறுதிப்படுத்தியமை மூலம் அந்த நம்பிக்கையை சிதறடித்திருக்கின்றார்.

இப்படி தம்மிஸ்டப்படி, அரசமைப்பை மீறும் விவகாரத்தை பகிரங்கமாக அறிவிக்கும் 'கற்றுக்குட்டி' அரசியல்வாதியை நம்பித்தான் – அவருக்குப் பின்னால்தான் – இந்தத் தேர்தலில் போகும்படி கூட்டமைப்பு தமிழர்களை வழிப்படுத்தி உள்ளது. இது சரியா? நியாயமானதா?

அரசமைப்பையே தூக்கிக் கடாசும் போக்கில் வெளிப்படையாகப் பேசும் இவர், கடந்த காலங்களில் அரசமைப்பை மீறிய ராஜபக்ஷ யுகத்தையும் விஞ்சமாட்டார் என்பதற்கு என்ன உறுதிப்பாடு உண்டு?

ரிச்சர்ட் டி சொய்ஸா படுகொலையுடன்தான் ஊடகங்களுக்கு எதிரான பயங்கரவாதம் இலங்கையில்தீவிரமெடுத்தது. அந்தப் 'பயங்கரவாதம்' உற்பவித்தது சஜித்தின் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ காலத்தில் என்பதும் மறக்கக் கூடியதல்ல.

ஜனாதிபதி – பிரதமர் இடையேயான முரண்பாடுதான் கடந்த ஐந்து ஆண்டு கால நல்லாட்சி அரசு என்ற அற்புத வாய்ப்பு சிதறடிக்கப்பட்டுப் போனமைக்குப் பிரதான முழுக் காரணம். அது நாட்டு மக்களுக்கும் நன்கு தெரியும்.

தான் ஜனாதிபதியானதும் இருக்கும் பிரதமருடன் முரண்டு பிடிப்பார் என்று கூறுவதன் மூலம் நாட்டு மக்களுக்கு சஜித் என்ன கூறுவருகின்றார்?

பதவியில் இருக்கும் பிரதமர் ரணில், தாம் ஜனாதிபதியானாலும் அரசமைப்புப்படி அந்தப் பதவியில் தொடருவார் என்பது நன்கு தெரிந்திருந்தும் சஜித் பிரேமதாஸ இப்படி அவருடன் ஒரு நிழல் யுத்தத்துக்கு இப்போதே வியூகம் வளைத்து, அதனைப் பகிரங்கப்படுத்துவது தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடும் வேலைதான்.

சஜித் ஜனாதிபதியானால், இதுவரை ஜனாதிபதி – பிரதமர் இடையே இருந்த மோதல் நிலை போன்ற ஒன்றே தொடரும் என்ற செய்தியை அம்பலப்படுத்துவதன் மூலம் தனக்கு வாக்களித்து அந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள் என்று மக்களுக்கு சஜித் கூறுகின்றாரோ?

# கூட்டமைப்பு சஜித்துக்கு ஆதரவளித்தமை தவறு

## கூறுகிறார் ஆனந்தசங்கரி



கிளிநொச்சி, நவ. 09

தமிழ் மக்கள் இன்றும் உணவு உள்ளிட்ட பல்வேறு அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவுக்குத் தமது ஆதரவை தெரிவித்தமையானது தவறு எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது வாகனச் சலுகைகளுக்காகவும் தமது சுயநலனுக்காகவும் இவ்வாறு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

தமிழ் மக்களின் நலன் சார்ந்து இவர்கள் செயற்படவில்லை. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் இன்றும் காணப்படும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவ்வாறு தமது ஆதரவை ஒரு தரப்புக்கு வழங்கினார்கள் என்று தெரியவில்லை.

இவ்வாறான முடிவு எடுப்பார்கள் என்பது ஏற்கனவே அறிந்த ஒன்றே. ஆரம்பத்தில் ரெலோவே முடிவை எடுக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் பின்னர்தான் தமது முடிவைத் தெரிவித்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சி மாத்திரம் இன்றும் அதே நிலைப்பாட்டில் உள்ளது.

அவர்கள் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் இருப்பார்கள் என்று நம்புகின்றேன். எமது கட்சி இன்றுவரை எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்க வில்லை.

நாம் இந்திய முறையிலான தீர்வை முன்வைக்குமாறு எமது நிலைப்பாட்டைக் கோரியிருந்தோம். இதுவரை அதற்கான முடிவுகள் கிடைக்கவில்லை.

இதனை அனைத்துத் தரப்பினரும் கடந்த காலங்களில் ஏற்றுக்கொண்டனர். இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு தரப்பினருக்கு ஆதரவு வழங்கியமையானது தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்.

அவ்வாறு ஆதரவைக் கொடுப்பதானால், எதையாவது பெற்று தருவோம் எனத் தெரிவிக்கும் நீங்கள் எதற்காகச் சமஷ்டி கோரினீர்கள்? எதற்காகத் தனிநாடு கோரினீர்கள்? ஒரு சந்தர்ப்பத்தில் சமஷ்டியை முன்னிலைப்படுத்தித் தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்கும் வகையில் வீடு வீடாகச் சென்று வாக்களிக்க வேண்டாம் என்று கூறினீர்கள். இன்று மீண்டும் எதற்காக வாக்களிக்க கோருகின்றீர்கள்?.

எனவே இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றுபவர்களுக்குச் சிறந்த பாடம் ஒன்றை எமது மக்கள் புகட்ட வேண்டும் – என்றார். (ஐ)

# அகில இலங்கை சமாதான நீதிவானாக கலாநிதி அகிலன் சத்தியப்பிரமாணம்!

'புதிய சுதந்திரன்', 'தமிழ் சி.என்.என்.' ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர் கலாநிதி முத்துக்குமாரசுவாமி அகிலகுமாரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மாவட்டநீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் Dry Zone Development foundation (Sri Lanka) இன் தலைவரும், Hunger Free world Foundation (Canada) இன் ஸ்தாபகரும், தொழிலதிபரும் ஆவார்.

கனடா தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்த விருதுவழங்கல் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறந்த தொழில் முயற்சியாளரும் சமூக சேவையாளருக்குமான விருது கலாநிதி முத்துக்குமாரசுவாமி அகிலகுமாரனுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆட்சியாளரைக் கேள்வி கேட்க நாட்டு மக்களுக்கு உரிமையுண்டு

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

ஆட்சியாளர்களை கேள்வி கேட்கும் உரிமை மக்களுக்கு உண்டென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இலங்கை வர்த்தக சபைப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று முன் தினம் மாலை கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரும்பாலான நாடுகளில் ஓர் ஆட்சியாளர் நியமிக்கப்பட்டால் அவரைக் கேள்வி கேட்க மக்களுக்கு முழு உரிமை வழங்கப்படுகின்றது.

அதேபோன்றதொரு கலாசாரத்தை இலங்கையிலும் உருவாக்க வேண்டும். ஒரு நாடு ஏழையாக மாறும்போது அந்த நாட்டிலுள்ள மக்களும் ஏழைகளாக மாறுவது தவிர்க்க முடியாதது.

எனவேதான் எனது பொருளாதாரத் திட்டம் ஒரு நாட்டை எவ்வாறு வளப்படுத்துவது மற்றும் வறுமையில் வாடும் மக்களை எவ்வாறு விடுவிப்பது என்பதை அடிப்படையாகக் கொண்டது.

இலங்கையில் கல்வியில் புதிய மாற்றம் தேவை அதற்கானதொரு திட்டமும் எம்மிடம் உள்ளது – என்றார். –(ஐ)




## நாளை

10.11.2019
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: திரியோதசி பி.ப. 05.33
திதி : ரேவதி அமிர்தம் மு.இ. 06.44
இராகுகாலம் : 04.35 – 06.05
சுப நேரம் : 09.05 – 10.35

# சமஷ்டி குறித்து பேசவேயில்லை!

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, நவ. 09

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவருடனும் சமஸ்டி ஆட்சி தொடர்பில் கலந்துரையாடவில்லை என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய இராணுவ சாசனத்தில் கையொப்பமிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.



இராணுவம், விமானப்படை, கடற்படை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களம், அங்கவீனமுற்ற இராணுவத்தினர் மற்றும் அந்த துறைக்குரிய பெண்கள் அமைப்பினர் உள்ளிட்டவர்களை பிரதிநிதிதுவப்படுத்தி தேசிய இராணுவ சாசனத்தில் சஜித் பிரேமதாஸ கையெழுத்திட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், ஒருமித்த இலங்கை, சுயநிர்ணயம், பிராந்திய ஒருமைப்பாடு, மனித உரிமைகளை வலுப்படுத்தல் ஆகியனவே எனதும், நாட்டினதும் எதிர்கால பயணத்தின் நோக்கமாகும். இந்த விடயங்கள் தொடர்பில் எவருடனும் கலந்துரையாடப்படவில்லை, இனி மேலும் கலந்துரையாடப் போவதில்லை.

என்னுடன் இணைந்துள்ளவர்கள் கோரும் சகலதையும் ஒருமித்த நாட்டுக்குள் நடைமுறைப்படுத்துவதாக எனது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளேன். ஆகவே அதனை அவ்வாறு செய்வதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருமித்த இலங்கையை ஏற்றுக்கொண்ட அனைவரும் இன்று என்னுடன் இணைந்துள்ளனர். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் சமஷ்டி முறைமை தொடர்பில் நான் பேசியதில்லை.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒருமித்த இலங்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

வரதராஜப்பெருமாள் என்பவரே நாட்டை இரண்டாகப் பிரித்து அதனைச் சுயதீனமான தனிநாடாக அறிவித்தார். அவ்வாறு மிக பெரிய தவறை இழைத்த வரதராஜப்பெருமாளுடன் இன்று கைகோர்த்து செயற்படுபவர் யார்? அவர் எமது எதிர்த்தரப்பு வேட்பாளராவார். அவ்வாறானவர்களுடன் எதிர்த்தரப்பினர் இன்று பல உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டுள்ளனர்.

வரதராஜப்பெருமாள் என்பவர் அவர்களுக்குச் சிறந்தவர். எனவே அங்குதான் தேசத் துரோகம் தலைதூக்கியுள்ளது. அதுவே நாடு, இனம், சமயம் ஆகியவை காட்டிக்கொடுக்கப்படும் பிரதான இடமாகும்.

ஒருமித்த நாட்டுக்குள் நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து, நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் போதுமானளவு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க எதிர்பார்கின்றேன். எதிர்வரும் 16 ஆம் திகதி யார் நாட்டின் மேல் உண்மையான பக்தி கொண்டவர் என்பதை மக்கள் தீர்மானிப்பர் என்பது எனது எண்ணம்.

எந்தவித அரசியல் தலையீடும் அற்ற பாதுகாப்புத் துறையின் ஊடாக சுயாதீனமிக்க கௌரவமிக்க முறையில் சேவையாற்றக் கூடிய பின்புலத்தை ஏற்படுத்துவேன். இராணுவத்தினரை அவர்களது கடமைகள் தவிர்ந்து வேறு அரசியல் உள்ளிட்ட எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுத்துவதை நிறுத்துவேன்.


ஆள்சேர்ப்பு, பதவியுயர்வு, வெளிநாட்டுச் சுற்றுலா, கல்வி, வெளிநாட்டுச் சேவை, நலன்புரி விடயங்கள் உள்ளிட்டவற்றில் தகுந்தவருக்கு உரிய இடத்தை வழங்குவேன். உயிர்நீத்த, அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்காகவும் அவர்களின் குடும்பங்களின் நலன்புரி விடயங்களுக்காகவும் இந்தத் தேசிய இராணுவ சாசனத்தை உரியவகையில் நடைமுறைபடுத்த நான் கடமைபட்டுள்ளேன் – என்றார். (ஐ)

# கிரிக்கெட் மோசடியாளர்களிடம் 1 லட்சம் டொலர் பெற்ற திலங்க!

## அர்ஜுன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

ஆட்ட நிர்ணய மோசடியுடன் தொடர்புள்ளவர்களிடமிருந்து முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால பணம் பெற்றார் எனச் சர்வதேச கிரிக்கெட் சபை எழுத்து மூலம் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அறிவித்துள்ளது என்றும், இது தொடர்பில் விசாரணை நடத்தி அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.



வேர்ள்ட் டெல் நிறுவனத்துக்கு தொலைக்காட்சி அலைவரிசை உரிமை வழங்க ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் பெற்றதற்கான ஆதாரங்களையும் சர்வதேச கிரிக்கெட் நிறுவனம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் விளையாட்டுக்கள் சட்டத்தின்கீழான மூன்று ஒழுங்கு விதிகளை அனுமதிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அனுப்பிய கடிதத்தையும் சபையில் சமர்ப்பித்தார்.

எனினும், இந்தக் கடிதம் போலியானது எனத் திலங்க சுமதிபால எம்.பி. ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்து நிராகரித்தார்.

ஆனால் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தனக்கு இது தொடர்பில் கடிதம் அனுப்பியதாகவும், ஆனால் அதனைச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மாத்திரம் பயன்படுத்துமாறு கோரியதால் இந்தக் கடிதத்தைத் தான் அம்பலப்படுத்தவில்லை எனவும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இதற்கு முன்பிருந்த விளையாட்டுத்துறை அமைச்சர்கள் ஆட்ட நிர்ணயத்துக்கு எதிராகச் சட்டம் கொண்டுவரவில்லை. 1990கள் முதல் குதிரைப் பந்தயத்துடன் தொடர்புபட்ட இவர், ஆட்ட நிர்ணயத்துடன் தொடர்புள்ளவர்களுடன் தொடர்புபட்டுள்ளார். இவரைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் கோப் குழுவுக்கு நியமித்துள்ளார். குற்றவியல் தவறு செய்துள்ள ஒருவரை ஏன் நியமிக்கவேண்டும்.

இது குறித்து சபாநாயகர் ஆராய வேண்டும். இவர் ஆட்ட நிர்ணயச் சதி செய்வோருடன் உரையாடிய ஒலிநாடாக்களும் ஐ.சி.சியில் உள்ளன. ஐ.சி.சி ஒருபோதும் பொய்யான கடிதம் அனுப்பாது. இதற்கமைய திலங்கவுக்கு எதிராக வழக்கு தொடரவேண்டும் – என்றார்.

இதன் போது குறுக்கீடு செய்த அமைச்சர் ஹரீன் பெர்ணாண்டோ, இந்தக் கடிதம் குறித்து விசாரணை நடத்துமாறு கிரிக்கெட் சபையை கோரியுள்ளேன். இதுவரை பதில் கிடைக்கவில்லை. நான் இந்த கடிதத்தைப் பகிரங்கப்படுத்தவில்லை. எவ்வாறு கடிதம் வெளியானது என விசாரிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# இரகசியங்களை வெளியிடுவேன்!

## ராஜபக்ஷ தரப்புக்கு ராஜித எச்சரிக்கை



கொழும்பு,நவ. 08

ராஜபக்ஷாக்களின் இரகசியங்களை மிக விரைவில் வெளியிடுவோமென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகாவால் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட இராணுவ வீரர்கள் ராஜபக்ஷாக்களால் தமது சொந்தத் தேவைகளுக்காகக் கொலைகளை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய தனது மோசடிகளை மறைப்பதற்காகச் சிலரைக் கொலை செய்வதற்காக இராணுவத்தினரைப் பயன்படுத்திக் கொண்டார்.

இராணுவத்தினரைப் பயன்படுத்திச்செய்யப்பட்ட கொலைகள் தொடர்பாக அறிந்தபோது நான் அதிர்ச்சியடைந்தேன். ஜனநாயக நாடான இலங்கையில் இது போன்ற மனிதப் படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன என்றால் யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

லசந்த விக்கிரமதுங்க மற்றும் கீத் நொயர் போன்ற ஊடகவியலாளர்களது கொலைச் சம்பவங்களுடன் எந்தவொரு அரசியல்வாதிகளும் நேரடியாகத் தொடர்புபடவில்லை.

எனினும் அந்தக் கொலைகளுடன் ராஜபக்ஷாக்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இது தொடர்பில் வெகு விரைவில் மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் – என்றார். (ஐ)

# கஞ்சா கடத்திய ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்ப்பாணத்திலிருந்து கேரளக் கஞ்சா கடத்திச் சென்றவரை வவுனியா பொலிஸார் நேற்று முன் தினம் இரவு 8.45 மணியளவில் கைது செய்துள்ளனர்.


யாழ்ப்பாணத்திலிருந்து முதூர் நோக்கி கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமாக நின்ற முதூர் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவரின் பயணப்பொதியைப் பொலிஸார் சோதனையிட்டனர்.

அவரிடம் சுமார் 1கிலோ 850கிராம் எடையுடைய கேரளக் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.



# அயோத்தி சர்ச்சைத் தீர்ப்பு எந்நேரத்திலும் வரலாம் உத்தரப் பிரதேசத்திலும் பிற இடங்களிலும் பதற்றம்

## பாதுகாப்பை தீவிரப்படுத்துகிறது இந்திய மத்திய அரசு



சர்ச்சைக்குரிய ராம ஜென்ம பூமியில் அமைக்கப்பட்டிருந்த பழமையான பாபரி மசூதி 1992 டிசெம்பர் 6ஆம் திகதி இந்துத்துவத் தொண்டர்கள் என்று கூறப்படுவோரால் பலவந்தமாக இடித்தழிக்கப்பட்டபோது....

புதுடில்லி,நவ.08

அயோத்தி ராமஜென்மபூமி – பாபர் மசூதி வழக்கில் தீர்ப்பு எந்நேரமும் வெளியாக உள்ள நிலையில் இதையொட்டி, அங்கு 4 ஆயிரம் துணை இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

உத்தரபிரதேச மாநிலம், அயோத்தியில் ராமஜென்மபூமி, பாபர் மசூதி அமைந்திருந்ததாக கூறப்படுகிற சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலம் யாருக்கு சொந்தமானது என்பதில் இன்னும் இறுதி முடிவு வரவில்லை.

இது தொடர்பான வழக்கை விசாரித்து, இந்த நிலத்தை சன்னி வக்பு வாரியம், நிர்மோகி அகாரா மற்றும் ராம் லல்லா ஆகிய 3 அமைப்புகளும் சரிசமமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று 2010 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி அலகாபாத் மேல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 14 பேர் மேன்முறையீடு செய்தனர். 9 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த மேன்முறையீட்டு வழக்குகளில் உச்சநீதி மன்றம் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையில் 5 பேரைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு தொடர்ந்து 40 நாள் விசாரணை நடத்தி முடித்துள்ளது.

இந்த வழக்குகளின் விசாரணை கடந்த மாதம் 16 ஆம் திகதி முடிந்து, தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், வருகிற 17 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். எனவே அதற்கு முன்பாக அயோத்தி வழக்கில் தீர்ப்பு வெளியாக உள்ளது. இந்தத் தீர்ப்பு நாடு முழுவதும் பெருத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

இந்த தீர்ப்பு வெளியாகின்றமையைத் தொடர்ந்து விரும்பத்தகாத விளைவுகள் நடந்து விடாதபடிக்கு பார்த்துக்கொள்வதில் மத்திய அரசு முனைப்பாக உள்ளது.

இந்த நிலையில் உத்தரபிரதேசத்துக்கு – குறிப்பாக அயோத்திக்கு – பாதுகாப்புப் பணிக்காக 4 ஆயிரம் துணைராணுவ வீரர்களை மத்திய உள்துறை அமைச்சகம் அனுப்பி வைத்துள்ளது. மேலும் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் பொதுவான உத்தரவு ஒன்றை மத்திய அரசு அனுப்பி உள்ளது.



அந்த உத்தரவில், பதற்றமான எல்லா இடங்களிலும் போதுமான பாதுகாப்புப் படையினரை அமர்த்த வேண்டும், நாட்டில் எங்கும் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடக்காது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்கொள்வதற்கு நாடு முழுவதும் இவ்வாறு தயாராகி வரும் நிலையில், சர்ச்சைக்குரிய நிலம் அமைந்திருக்கும் உத்தரபிரதேசத்தின் அயோத்தியில் கடந்த சில நாள்களாகவே பதற்றம் நிலவி வருகிறது. அங்கு ஏற்கனவே 4 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது.

தீர்ப்பு வெளியானதும் அயோத்தியில் எத்தகைய சூழல் நிலவுமோ என்ற அச்சம் மாவட்டம் முழுவதும்




மக்களிடம் நிலவி வருகிறது. இதனால் சர்ச்சைக்குரிய நிலத்தின் அருகே வசித்து வரும் மக்கள், இப்போதே அத்தியாவசிய பொருள்களை வாங்கி சேகரிக்கும் நிலைக்கு வந்துள்ளனர்.

மேலும் இந்த மாதம் நடத்த திட்டமிட்டிருக்கும் திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகளை ரத்து செய்யவும் சிலர் திட்டமிட்டு உள்ளனர். இது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தை தொடர்ந்து நாடி வரும் அவர்கள், திருமண நிகழ்ச்சிகல் போன்றவற்றைத் தள்ளி வைக்கட்டுமா என வினவி வருகின்றனர்.

ஆனால் திட்டமிட்டபடி திருமணம் போன்ற விழாக்களை நடத்துமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக கலெக் டர் அனுஜ் குமார் ஜா செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு: –

அயோத்தி வழக்குத் தீர்ப்புக்குப்பின் மாவட்டத்தில் இயல்பு நிலை உறுதியாக பாதுகாக்கப்படும். எந்த நிலையிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சட்டம், ஒழுங்கைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே தொடங்கி விட்டோம்.

வதந்திகளை பரப்பவோ, பதற்றத்தை ஏற்படுத்தவோ கூடாது என மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. திருமணம் போன்ற தனியார் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டபடியே நடத்துமாறு மக்களை அறிவுறுத்தி உள்ளோம். பள்ளிகள் மற்றும் அனைத்து நிறுவனங்களும் தீர்ப்புக்குப் பின்னரும் சுமுகமாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. – இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

இவ்வாறு மாவட்ட நிர்வாகம் பல்வேறு அமைதி நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும், அங்குள்ள மக்களிடையே ஒருவித பதற்றம் நிலவி வருவதாகவே அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சட்டம், ஒழுங்கை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

### உத்தரப்பிரதேச முதல்வர் எச்சரிக்கை



லக்னோ,நவ.08


அயோத்தி வழக்கில் விரைவில் தீர்ப்பு வெளிவர உள்ள நிலையில், சட்டம் – ஒழுங்கை சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் எச்சரித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு, நாடு முழுவதும் பெருத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த தீர்ப்பைத் தொடர்ந்து விரும்பத்தகாத விளைவுகள் நடந்து விடாதபடிக்கு பார்த்துக்கொள்வதில் மத்திய அரசு முனைப்பாக உள்ளது.

இந்தச் சூழலில், அவசர தேவைகளுக்காக இரண்டு ஹெலிக்கொப்டர்கள் லக்னோவில் தயார் நிலையில் வைக்கப்படும் என்று உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

மேலும், மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை ஒன்றும் லக்னோவில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், சட்டம் – ஒழுங்கை சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.





## கமல்,ரஜினி சேர்ந்து நேற்று கே.பாலசந்தர் சிலை திறப்பு

சென்னை,ஆழ்வார்பேட்டையில் இருக்கும் ராஜ்கமல் அலுவலகத்தில் இயக்குநர் கே.பாலசந்தர் சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழாவில், நடிகர் ரஜினிகாந்த், கமல்ஹாசன் ஆகியோர் இணைந்து இயக்குநர் கே.பாலச்சந்தரின் மார்பளவு சிலையைத் திறந்து வைத்தனர்.

கமலுக்கு சொந்தமான ராஜ்கமல் நிறுவனம், ராஜபார்வை, விக்ரம், சத்யா, அபூர்வ சகோதரர்கள், தேவர் மகன், குருதிப்புனல், ஹேராம், விஸ்வரூபம், தூங்காவனம், சமீபத்தில் வெளியான கடாரம் கொண்டான் உள்ளிட்ட படங்களை தயாரித்திருக்கின்றது.

## பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல்



சென்னை,நவ.08

தமிழக அரசு ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் வழங்க புழல் மத்திய சிறை அத்தியட்சகர் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக பேரறிவாளன் ஆயுள் தண்டனை கைதியாக புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் தனது தந்தையின் உடல்நிலை சரியில்லாததால் அவரை கவனிக்க தனக்கு ஒரு மாதம் ‘பரோல்’ வழங்க வேண்டும் என்று விண்ணப்பித்து இருந்தார்.

இதற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் வழங்க புழல் மத்திய சிறை அத்தியட்சகர் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார். எனவே அவர் நேற்று (வெள்ளிக்கிழமை) சிறையில் இருந்து ‘பரோலில்’ வீடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.



# அதிபர் ட்ரம்புக்கு ரூ.35 கோடி அபராதம் விதித்த பெண் நீதிபதி

வொஷிங்டன்,நவ.09

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதித்தார் பெண் நீதிபதி. ஒருவர்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், 'டொனால்ட் ஜே டிரம்ப் பவுண்டேஷன்' எனும் அறக்கட்டளையை நடத்தி வருகிறார். இந்த அறக்கட்டளையின் நிதியை டிரம்ப் தனது சொந்தச்செலவுகளுக்குப் பயன்படுத்துகின்றார் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனையடுத்து 2018ஆம் ஆண்டு இந்த அறக்கட்டளை மூடப்பட்டது. இது தொடர்பாக நடந்து வரும் வழக்கில் டிரம்ப் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அவரக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதிபர் டிரம்ப் தனது அறக்கட்டளையின் நிதியை முறைகேடான வகையில், தேர்தல் செலவுகளுக்கு பயன்படுத்தியதற்காக நியூயோர்க் நீதிமன்றம் அவருக்கு இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் (இலங்கைப் பண மதிப்பில் சுமார் 35 கோடி ரூபா) அபராதம் விதித்துள்ளது.

இத்தகைய அறக்கட்டளை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது என்று இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி சேலியன் ஸ்கார்புலா தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்பு படையினருக்காக வசூலிக்கப்பட்ட பணம் டிரம்ப் தேர்தல் செலவுக்கு 2016 – இல் முறைகேடாக பயன்படுத்தப்பட்டது என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

டிரம்ப் அபராதமாக செலுத்தும் பணம், அவருடன் தொடர்பில்லாத வேறு எட்டு தொண்டு நிறுவனங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

# அணுசக்திக்கான யுரேனியம் செறிவூட்டலை தடைகளையும் மீறித் தொடங்கியது ஈரான்!

தெஹ்ரான்,நவ.08

அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி யுரேனியம் செறிவூட்டும் பணிகளை ஈரான் தொடங்கியது. இதற்கு பிரான்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளது

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையே வரலாற்று சிறப்பு மிக்க அணுசக்தி ஒப்பந்தம் கடந்த 2015 ஆம் ஆண்டில் கையெழுத்தானது. தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கானவை அல்ல என்பதை ஈரான் உறுதி செய்யவும், அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை வல்லரசு நாடுகள் விலக்கி கொள்ளவும் இரு தரப்பிலும் அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், அணுசக்தி எரிபொருளாகப் பயன்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை குறிப்பிட்ட அளவே ஈரான் கையிருப்பு வைத்திருக்க வேண்டும், அணுசக்தி மையங்களில் யுரேனியம் எரிபொருளை 3.67 சதவீதத்துக்கு மேல் செறிவூட்டக்கூடாது, முதல்தலைமுறையை சேர்ந்த ஐ.ஆர்.1 ரக சாதனங்களை கொண்டே யுரேனியம் சுத்திகரிக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

இதற்கிடையே, அமெரிக்காவில் ஒபாமா பதவி காலத்தில் கையெழுத்தான இந்த அணுசக்தி ஒப்பந்தத்தை கடுமையாக விமர்சித்து வந்த ஜனாதிபதி டிரம்ப், இந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக கடந்த ஆண்டு மே மாதம் அறிவித்தார். அது மட்டும் இன்றி ஒப்பந்தத்தில் இருந்து விலகியதும் ஈரான் மீது மீண்டும் கடுமையான பொருளாதாரத் தடைகளையும் அவர் விதித்தார்.

மேலும் அணு ஆயுத விவகாரம் தொடர்பாகப் பேச்சு நடத்திப் புதியதொரு ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் என டிரம்ப், ஈரானை வலியுறுத்தி வருகிறார். ஆனால் தங்கள் மீதான பொருளாதார தடைகளை நீக்கும்வரை பேச்சுக்கு இடமில்லை என்பதில் ஈரான் திட்டவட்டமாக உள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்குப் பதிலடியாக செறிவூட்டப்பட்ட யுரேனியகையிருப்பின் அளவு உள்பட அணுசக்தி ஒப்பந்தத்தில் உள்ள 3 முக்கிய நிபந்தனைகளை மீறுவதாக ஈரான் அறிவித்தது. இதனை அமெரிக்கா கண்டித்து ஈரான் மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்த நிலையில், 4 ஆவது விதிமீறலாக, போர்டோ நகரிலுள்ள தனது நிலத்தடி அணுசக்தி மையத்தில் யுரேனியம் செறிவூட்டும் பணிகளை தொடங்கப் போவதாக ஈரான் அதிபர் ஹசன் ருஹானி கடந்த செவ்வாய்க்கிழமை அதிரடியாக அறிவித்தார்.

போர்டோ நகர நிலத்தடி அணுசக்தி மையத்தில், யுரேனியம் செறிவூட்டும் பணிகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்று 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்தில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரானின் இந்த நடவடிக்கை உலக அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும், இதன் மூலம் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஈரான் மேலும் தனிமைப்படுத்தப்படும் என்றும் அமெரிக்கா பகிரங்க எச்சரிக்கை விடுத்தது.

ஆனால் அமெரிக்காவின் எச்சரிக்கையையும் மீறி ஈரான் ஏற்கனவே அறிவித்தபடி போர்டோ நகர நிலத்தடி அணுசக்தி மையத்தில் யுரேனியம் செறிவூட்டும் பணிகளை நேற்று முன்தினம் தொடங்கியது. சர்வதேச அணுசக்தி அமைப்பின் (ஐ.ஏ.இ.ஏ) ஆய்வாளர்கள் முன்னிலையில் யுரேனியம் செறிவூட்டும் பணிகள் தொடங்கின என ஈரான் அணுசக்தி அமைப்பின் செய்தி தொடர்பாளர் கூறினார்.



அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள வல்லரசு நாடுகளில் ஒன்றான பிரான்ஸ், ஈரானின் இந்த நடவடிக்கையைக் கடுமையாக கண்டித்துள்ளது. இது அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் வெளியேற விரும்புவதை வெளிப்படையாகக் காட்டுவதாக பிரான்ஸ் அதிபர் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

# சீனாவின் ஷாங்காய் கார் கண்காட்சியில் கண்களைக் கவர்ந்த புதிய மொடல்கள்!





*சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெறும் கண்காட்சியில் 60 கார் தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்று, நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய வகைக் கார்களைப் பார்வைக்கு வைத்துள்ளன.*

*அங்கு சீனா சர்வதேச இறக்குமதி கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைபெற்று வருகிறது. 6 நாள்கள் நடைபெறும் கண்காட்சியில், 16 நாடுகளில் இருந்து 60 கார் தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்று, தங்களது தயாரிப்பில் உருவாகி அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் கார்கள், புதிய மொடல் கார்கள் உள்ளிட்டவற்றைப் பார்வைக்கு வைத்துள்ளன.*

*இதில் ஹியூன்டாய், கியா ஆகிய நிறுவனங்களின் தயாரிப்பில் உருவாகியுள்ள புதிய வகை மின்சாரக் கார்கள் உள்பட 140க்கும் மேற்பட்ட கார்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.*

*ஹைட்ரஜன் மூலம் இயங்கும் டொயோட்டா நிறுவனத்தின் மிராய் மாடல் (Toyota's Mirai) கார், ஹொண்டா, வோல்ஸ்வேகன், ஓடி நிறுவனங்களின் புதிய மொடல் கார்களும், வின்டேஜ் மொடல் கார்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.*



# ஒரே நாளில் 700 விமான சேவைகளை ரத்து செய்தது லூவ்தான்ஸா நிறுவனம்

ஜேர்மனியின் பிரபல லூவ்தான்ஸா விமான நிறுவன ஊழியர்கள் ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டதால், அந்நிறுவனத்தின் 700 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

ஜேர்மனியின் மிகப்பெரிய விமான நிறுவனமாக திகழும் லூவ்தான்ஸா, பல்வேறு நகரங்களுக்கும் விமானங்களை இயக்கி வருகிறது. இந்நிலையில், அந்நிறுவன ஊழியர்கள் 48 மணி நேர வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நேற்று முன்தினம் ஒரே நாளில் 700 விமானங்களை அந்நிறுவனம் ரத்துச் செய்தது.

பிராங்போர்ட் விமான நிலையத்தில் மட்டும் 400 விமானங்களை லூவ்தான்ஸா ரத்து செய்தது. முனிச் விமான நிலையத்தில் 250 விமானங்களும், மேலும் சில சிறிய விமான நிலையங்களில் 50 வரையிலான விமானங்களும் லூவ்தான்ஸா நிறுவனத்தால் ரத்து செய்யப்பட்டன. இதனால் லூவ்தான்ஸா நிறுவன விமானங்களில் பயணிக்க முன்பதிவு செய்த ஆயிரக்கணக்கான பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

# தேர்தல் செலவுகள்; ஒரு கண்காணிப்பு

எதிர்வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பிரதான கட்சிகளின் மூன்று வேட்பாளர்களின் செலவுகள் தொடர்பிலான தகவல்களைத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் கண்காணிப்பு நிலையமான தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கொழும்பில் நவம்பர் 5 அன்று ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து இந்த விடயத்தை வரலாற்றில் முதல் தடவையாக வெளியிட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, புதிய ஜனநாயக முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளினால் கடந்த அக்டோபர் மாதம் 14ஆம் திகதி முதல் 31ஆம் தேதி வரையான செலவுகளை அந்த நிலையம் வெளியிட்டது.

குறித்த காலப் பகுதியில் மாத்திரம் மூன்று பிரதான கட்சிகளும் சுமார் 962 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளன என அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 574 மில்லியன் ரூபாயை இந்த காலப் பகுதிக்குள் மாத்திரம் செலவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதேபோன்று சஜித் பிரேமதாஸ போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) 372 மில்லியன் ரூபாய் குறித்த காலப் பகுதியில் மாத்திரம்



செலவிட்டுள்ளதாக அந்த நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அநுர குமார திஸாநாயக்க

அதேபோன்று அநுரகுமார திஸாநாயக்க போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி இந்த காலப் பகுதியில் 16 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

அச்சு ஊடகம், ஒளிபரப்பு ஊடகம், சமூக ஊடகம் மற்றும் ஏனைய செலவுகள் (கூட்டங்கள், ஊர்வலங்கள், காட்சிப் பொருள்கள், அரச சொத்துகளின் துஷ்பிரயோகச் செலவுகள்) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் இந்தச் செலவீன அறிக்கையைத் தயாரித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) ஆகியன ஒளிபரப்பு ஊடகத்திற்காகவே அதிகளவிலான செலவுகளை மேற்கொண்டுள்ளன என அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒளிபரப்பு ஊடகத்திற்காக 456 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளதுடன், புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) 219 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) ஒளிபரப்பு ஊடகத்திற்காக 4 மில்லியன் ரூபாயை செலவு செய்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கள ரீதியான பிரசாரத்திற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 76 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ள அதேவேளை, புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) கள ரீதியான பிரசாரத்திற்கு 85 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி கள ரீதியான பிரசாரத்திற்காக 11 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது.

அத்துடன், அச்சு ஊடக பிரசாரத்திற்காக புதிய ஜனநாயக முன்னணி (ஐ.தே.மு) 68 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளமையுடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அச்சு ஊடகத்திற்காக 42 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) அச்சு ஊடகத்திற்காக ஒரு மில்லியன் ரூபாவைச் செலவு செய்துள்ளதாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் குறிப்பிடுகின்றது.

### சமூக ஊடக பயன்பாடு

சமூக ஊடகத்தின் ஊடாக இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கணிப்பிடப்பட்டுள்ளது,

இதன்படி, ஃபேஸ்புக் சமூக வலைத்தளத்தை பயன்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிகள விலான பிரசாரத்தை மேற்கொண்டுள்ளதுடன், புதிய ஜனநாயக முன்னணியும் ஃபேஸ்புக் சமூக வலைத் தளத்தை குறிப்பிடத்தக்களவு பயன்படுத்தியுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 35 வேட்பாளர்களில் மூன்று பிரதான வேட்பாளர்களின் செலவீனங்கள் இவ்வாறு இருக்க, ஏனைய வேட்பாளர்கள் ஒட்டு மொத்தமாக சுமார் 20 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளனர் என அந்த நிலையம் கணிப்பீடு செய்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்னாள் இராணுவ தளபதி மகேஷ் சேனாநாயக்க மற்றும் இந்த தேர்தலில் போட்டியிடும் ஒரேயொரு பெண் வேட்பாளரான அஜந்த பெரேரா ஆகியோர் சுமார் நான்கு மில்லியன் ரூபாவைத் தேர்தல் பிரசாரத்திற்காக செலவு செய்துள்ளனர் என அந்த நிலையம் சுட்டிக்காட்டுகின்றது.

ஏனைய வேட்பாளர்கள் மிகவும் சிறியளவிலான தொகையை செலவு செய்தே, தமது தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் குறிப்பிடுகின்றது.

குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ 60 வீதமான செலவுகளையும், புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 39 வீதமான செலவுகளையும், தேசிய மக்கள் சக்தி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அநுர குமார திஸாநாயக்க ஒரு வீதமான செலவுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், சமூக வலைத்தளங்களில் செலவிடப்பட்ட செலவீனங்கள் மற்றும் வானொலிகளில் பிரசாரத்திற்காக செலவிடப்பட்ட செலவுகள் இதுவரை கணிப்பிடப்படவில்லை என அந்த நிலையம் சுட்டிக்காட்டுகின்றது.

எதிர்வரும் சில தினங்களில் முழுமையாக செலவுகள் தொடர்பான தகவல்களை திரட்டி நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாக அந்த நிலையத்தின் இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க குறிப்பிட்டார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் இந்த தேர்தல் காலப் பகுதியில் மாத்திரம்



சுமார் 10 பில்லியன் ரூபா செலவு செய்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் நிதியாக்க செலவுகள் என்பவை யாவை?

வேட்பாளர் ஒருவரால் அல்லது அவர் சார்பாக பின்வருபவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்



01. அந்தத் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள் அல்லது துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை அச்சடித்தல், வெளியிடுதல், விளம்பரங்கள், கைப்பிரசுரங்கள், கொடிகள், படங்கள், புகைப்படங்கள், சுலோக அட்டைகள் அல்லது சுவரொட்டிகள் என்பவற்றைக் காட்சிப்படுத்துதல் அல்லது பார்வைக்கு வைத்தல்.

02. தேர்தல் தொடர்பான விளம்பரங்களைத் தயாரித்தல் மற்றும் வானொலி அல்லது தொலைக்காட்சி என்பவற்றில் அவற்றை ஒலி மற்றும் ஒளி பரப்பு செய்தல்.

03. தேர்தல் தொடர்பான விளம்பரங்களைத் தயாரித்தல் மற்றும் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் அல்லது ஏனைய வெளியீடுகளில் பிரசுரித்தல்.

04. தேர்தல் தொடர்பான கூட்டங்களை வைப்பதற்காக ஏதேனும் இடத்தை அல்லது உபகரணத்தை வாடகைக்கு பெறுதல் அல்லது பயன்படுத்துதல்.

05.வேட்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் மற்றும் விமானங்கள் என்பவற்றை வாடகைக்கு அமர்த்துதல் போன்ற போக்குவரத்துச் செலவுகள். (மேற்குறிப்பிட்டவற்றுள் உள்ளடங்காதவை)

06. பொது மூலவளங்களைத் துஷ்பிரயோகிப்பதின் மூலமாக தனிப்பட்ட பிரசாரங்களுக்காக அரசு அல்லது மக்களால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள்.

தேர்தல்களில் பிரசார நிதியாக்கம் ஏன் ஒரு பிரச்சனையாக உள்ளது?

01. தேர்தல் செயன்முறையின் போது மற்றைய வேட்பாளர்களை தேர்தலில் இருந்து விலகச் செய்யும் ஒரு விதத்தில் சில வேட்பாளர்கள் நிதியை உபயோகிப்பதற்கு இயலுமாக இருப்பதால், கட்டுப்படுத்தப்படாத அல்லது மட்டுப்பாடற்ற நிதிச் செலவுகள் ஜனநாயகத் தேர்தல்களை மோசமான வகையில் பாதிக்க முடியும்.

02. மட்டுப்பாடற்ற அல்லது கட்டுப்படுத்தப்படாத பிரசார நிதியாக்கம் தேர்தல் செய்முறையின் போது வேட்பாளர்கள் மத்தியில் ஒரு சமனற்ற போட்டிக் களத்தை உருவாக்கும்.

03. அது ஊழல், லஞ்சம், அரச சொத்துகளின் துஷ்பிரயோகம், பாரபட்சம் மற்றும் வன்முறைகள் என்பவற்றுக்கு இட்டுச் செல்கிறது.

இலங்கையில், பிரசார நிதியாக்கம் தொடர்பில் சட்டமோ அல்லது கட்டுப்பாட்டு பொறிமுறையோ இல்லை எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் குறிப்பிடுகின்றது.

இதன்படி, இலங்கையில் நடைபெறுகின்ற தேர்தல்களில் செலவு தொடர்பான வரையறையொன்றை வைக்க வேண்டிய வகையில் சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் வலியுறுத்துகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் இறுதியாக கேள்வியொன்றை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளிடம் தொடுக்கின்றது.

'இந்த நிதிகளுக்கான மூலங்கள் எவை?'– என்ற கேள்வியையே தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளிடம் தொடுக்கின்றது.

நன்றி :- பி.பி.சி. இணையம்

# யாழ்ப்பாண விமான நிலையம் மீது ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸுக்கு கண்!

## இந்திய நகரங்களுக்கு சேவைகளை பலாலி ஊடாக நடத்துவதற்கு திட்டம்

கொழும்பு, நவ. 09

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்தில் இருந்து விரைவில் விமான சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையம் கடந்தமாதம் 17ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதை அடுத்து, எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் சென்னை – யாழ்ப்பாணம் இடையிலான விமான சேவையை அலையன்ஸ் எயர் நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிலையில், யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து விமான சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி விபுல குணதிலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அடுத்த ஆண்டுக்குள் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு விமான சேவைகளை ஆரம்பிக்க முடியும் என்று நம்புகிறோம். இதற்காக, சிறிய விமானங்களைக் குத்தகைக்குப் பெறுவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.




இந்தியாவின் சில நகரங்களுக்கு விமானங்களை இயக்கும்போது, யாழ்ப்பாணத்தின் ஊடாகச் சேவையை நடத்தும் திட்டமும் உள்ளது.

இது கொழும்பு – யாழ்ப்பாணத்துக்கும் இடையே நல்ல இணைப்பை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாணத்தில் ஓர் அனைத்துலக விமான நிலையத்தைத் திறப்பது இப்பகுதியில் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்த உதவும்.

தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானங்களை இயக்குவதன் மூலம், இந்த முயற்சிகளுக்கு உதவ முடியும்.

எனினும், எங்களிடம் தற்போது, யாழ்ப்பாணத்துக்கு இயக்கக்கூடிய விமானங்கள் இல்லை.

அடுத்த ஆண்டு இந்தச் சேவையைத் தொடங்குவதற்குப் பொருத்தமான விமானத்தைக் குத்தகைக்குப் பெறுவதற்கு முற்படுகிறோம் – என்றார். (ஐ)

---

### சிறுப்பிட்டி இந்து மயான விவகாரம்;

# நீதிவானின் கட்டளையை நீக்கி யாழ். மேல் நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், நவ. 08

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி, கிந்துப்பிட்டி மாயானத்தில் சடலங்களை எரியூட்டுவது தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை ரத்துச் செய்த யாழப்பாணம் மேல் நீதிமன்றம் சீராய்வு விண்ணபத்தையும் தள்ளுபடி செய்தது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் மாறுபட்ட கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டிய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் காணப்படாத நிலையில் சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்வதாக கட்டளையிட்டார்.

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள மயானத்தை அகற்றுமாறு அதனைச் சூழ வசிக்கும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். அதேவேளை, அந்த மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என ஒரு பகுதியினர் மல்லாகம் நீதிமன்றை நாடி இருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், மயானத்தை சூழ பத்து அடி உயர மதிலைக் கட்டி , சடலங்களை எரியூட்டுமாறும் , ஒரு வருட காலத்துக்குள் மின்தகன மயானமாக அதனை மாற்றுமாறும் கட்டளையிட்டிருந்தார்.

மல்லாகம் நீதிவான் மன்றின் கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மயானத்தை சூழவுள்ள மக்கள் சார்பில் கலைமதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி தம்பையா, சீராய்வு மனுத் தாக்கல் செய்தார்.

வழக்கின் எதிர்மனுதாரர்களாக கிந்துப்பிட்டி மயான நிர்வாகம், அச்சுவேலி பொலிஸார் மற் றும் சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டனர்.

அந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொள்ளபப்ட்டது.

அதன் போது மயானத்தைச் சூழவுள்ள மக்களும் மன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மனுவை விசாரணை செய்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் அப்போதைய நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அந்த மயானத்தை அனுமதிப்பதா, நிரந்தரமாக அகற்றுவதா? என்ற முடிவை எடுக்கும் அதிகாரம் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சருக்கு உண்டு. அந்தப் பகுதியில் வாழும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க மன்று பணிக்கிறது. இந்த வழக்கு முடி வுறும்வரை கிந்துப்பிட்டி மயானத்தில் சடலங் களை எரியூட்ட தடை விதிக்கப்படும் என்று இடைக்காலக் கட்டளை வழங்கினார்.

மனுவின் இடைபுகு மனுதாரராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடாக மற்றொரு தரப்பு ஆவணங்களை இணைத்து தம்மையும் இந்த வழக்கில் இணைத்துக் கொள்ளுமாறு மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

இந்த சீராய்வு மனு மீதான விசாரணை சுமார் இரண்டு வருடங்களாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. மனு மீதான கட்டளைக்காக நேற்று தினம் நியமிக்கப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வழங்கிய கட்டளையை ரத்துச் செய்து கட்டளையிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சீராய்வு மனுவையும் தள்ளுபடி செய்தார். (ஐ -07)

---

# போர்க்காலத்தில் கிழக்கில் ஜிஹாத் குழு இயங்கியது!

### பொலிஸ் அதிகாரி பரபரப்பு வாக்குமூலம்

கொழும்பு, நவ. 09

போர் இடம்பெற்ற காலப்பகுதியிலேயே கிழக்கு மாகாணத்தில் ஜிகாத் குழு எனும் பெயரில் கடும்போக்கு இஸ்லாமியக் குழு இயங்கியதாக, கொழும்புபிரதிப்பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளர் பிரதான பொலிஸ் பரிசோதகர் திலீப் திவாகர டி சில்வா சாட்சியமளித்துள்ளார்.

இந்தக் குழுவினர் ஆயுதம் ஏந்தி இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைத் தாக்காதபோதும், அவர்களது நிலைப்பாடுகளும் நடவடிக்கைகளும் சாதாரண முஸ்லிம்களிடமிருந்து வேறுபட்டனவாகக் காணப்பட்டன என அவர் இதன்போது கூறினார்.

21/4 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் நேற்று முன் தினம் 4 ஆவது நாளாக நடைபெற்றன. இதில் 3 ஆவது சாட்சியாளராகக் கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளர் திலீப் திவாகர டி சில்வா நேற்று முன் தினம் சாட்சியளித்திருந்தார். (ஐ)

---

# சஜித், கோட்டா எந்த முகத்துடன் தமிழரிடம் வாக்கு கேட்பார்கள்?

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கேள்வி



கொழும்பு, நவ. 08

தமிழ் மக்களின் கோரிக்கைகளைநிராகரித்த இரண்டுபிரதான வேட்பாளர்களும் எந்த அடிப்படையில் தமிழ் மக்களிடம் தங்களுக்கு வாக்களிக்குமாறு கோருவார்கள்? அதனால் வேட்பாளர்களை நிராகரிக்கும் முறையை அறிமுகப்படுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கு –கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள், மதத்தலைவர்கள், சுயாதீன அமைப்புகள் இணைந்து 5 கட்சிகளினால் கொண்டு வரப்பட்ட 13 அம்ச கோரிக்கையானது கடந்த 70 வருட காலம் தீர்க்கப்படாதிருக்கும் முக்கியமான அம்சங்களே.

அவற்றில் அரசியல் தீர்வு தவிர்த்து ஏனையவை யுத்தத்துக்கு பின்னரான நிலைமைகளாகவே உள்ளன. அதாவது அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு , பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்குதல், அபிவிருத்தி, வேலைவாய்ப்பு ஆகியன காணப்படுகின்றன. இவை தனி நாட்டுக்கான கோரிக்கைனஎல்ல. தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை காரணமாக தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையிலேயே 13 அம்சக் கோரிக்கைகளை வேட்பாளர்களுக்கு கையளிக்க நடவடிக்கையெடுத்தோம்.

ஆனால் பொதுஜன பெரமுன வேட்பாளர் வெளிப்படையாகவே இந்த கோரிக்கைகள் தொடர்பில் எங்களைச் சந்திக்கத் தயார் இல்லையெனக் கூறிவிட்டார். அதேபோன்று சஜித் பிரேமதாஸவும் ஒரு படி மேலே சென்று யாருடைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படப்போவதில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலைமையில் தமிழ் மக்கள் உங்களுக்கு என்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களிடம் இருக்கும் கேள்விகளாக உள்ளன– என்றார். (ஐ)

---

# பாதகமான உடன்பாடுகளில் நான் கையெழுத்திடமாட்டேன்

### அடித்துச் சொல்கிறார் கோட்டாபய



நாட்டின் இறையாண்மையை பாதிக்கும் எந்தவொரு உடன்பாட்டிலும், கையெழுத்திடுவதற்கு தான் இடமளிக்கமாட்டார் என்று பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வெளிநாடுகளுடன் இலங்கை நட்புடன் இருப்பதை உறுதி செய்வேன். எனினும், அனைத்துலக அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டேன்.

அணிசேராக் கொள்கையையே இலங்கை பின்பற்றியுள்ளது. தேசத்தின் இறையாண்மையையும் தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான திட்டங்கள் எனது தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# தென்னாபிரிக்க ரி - 20 அணிக்கு டு பிளசிஸ் தலைமையேற்பார்

அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள 'ருவென்டி 20' உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணிக்குப் டு பிளசிஸ் தலைமை தாங்குவார் என அவ்வணியின் தற்போதைய 'ருவென்ரி 20' அணித்தலைவர் குயின்டன்டிகொக்எதிர்பார்த்துள்ளார்.

இங்கிலாந்தில் இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா அணி மோசமான பெறுபேறுகளுடன் முதல் சுற்றில் இருந்து வெளியேறியதன் பின்னர், அந்த அணியின் தலைமைகளில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதற்கமைய, 'ருவென்ரி 20' அணியை குயின்டன் டி கொக் தலைமை தாங்குகின்றார்.

அவரது தலைமையின் கீழ் இந்தியாவில் இடம்பெற்ற 'ருவென்ரி 20' தொடரைத் தென்னாபிரிக்கா 1 – 1 என சமன் செய்தது. ஆனால், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில், டு பிளசிஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணி படுதோல்வியடைந்து 'வைட் வோஷ்' ஆனது.

இதனைத் தொடர்ந்து டு பிளசிஸின் டெஸ்ட் அணித் தலைமையும் கேள்விக்குறியானது. இந்நிலையில், குயின்டன் டி கொக், மீள டு பிளசிஸ் தலைமையைக் கோரியுள்ளார். ஆனாலும், அவர் அணித் தலைமையை உடனடியாக ஏற்க மாட்டார் எனவும் குயின்டன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவில் அடுத்தடுத்து இரண்டு 'ருவென்ரி 20' உலகக் கிண்ணத் தொடர்கள் இடம்பெறவுள்ள நிலையில், டு பிளசிஸின் தலைமையை குயின்டன் டி கொக் எதிர்பார்த்துள்ளார்.

'நான் ஒரு பதிலீடாகவே ருவென்ரி 20 தலைமையை ஏற்றேன். இப்பொழுதும் அது டு பிளசிஸினுடைய குழந்தை. ஆனால், நிலைமை மாற்றமடைந்து அணி நிர்வாகம் என்னை நிரந்தரமாக தலைமை தாங்கும்படி கூறினால், அதனை நான் செய்வேன்'–எனவும் குயின்டன் கிரிக்கெட் இணையத்தளம் ஒன்றுக்குச் செவ்வி அளித்துள்ளார்.

டு பிளசிஸ் தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக குயின்டன் டி கொக் கடந்த 2018 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலும், தலைமை தாங்கியிருந்தார்.



தற்போது, தென்னாபிரிக்க கழகங்களுக்கு இடையிலான 'ருவென்ரி 20' தொடரான எம்சன்சி சுப்பர் லீக்கிலும் கேப் டவுண் பிளிட்ஸ் அணியை குயின்டன் டி கொக் தலைமைதாங்குகின்றார்.

தென்னாபிரிக்காவின் மற்றுமொரு வீரரான ரெம்பா பவுமா, எம்.எஸ்.எல் தொடரில் நடப்புச் சம்பியனான ஜோசி ஸ்டார்ஸ் அணியை வழிநடத்தவுள்ளார். இவர் கடந்த வருடம் டர்பன் ஹீட் அணிக்காக விளையாடியுள்ளார்.

அதேபோல, ஹென்றிச் கிளாசென் ரஷ்வன் ஸ்பார்டன்ஸ் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் மார்க் பௌச்சர் செயற்படுகின்றார். இதே அணியில் 'மிஸ்டர் 360' என அழைக்கப்படும் தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர் ஏபி டி வில்லியர்ஸும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். ஆரம்ப விழா இனிமேல் நடைபெறாது!




ஐ.பி.எல். தொடருக்கான ஆரம்ப விழாவை இரத்துச் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் இரசிகர்கள் ஐ.பி.எல். ஆரம்ப விழாவில் ஆர்வம் காட்டுவதில்லை என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியக் கிரிக்கட் சபை நிர்வாக அதிகாரி, ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆரம்ப விழாவில் கலந்துகொள்ளும் பிரபலங்களுக்கு அதிக சம்பளம் வழங்க வேண்டியுள்ளதாகவும் விழாவுக்காகச் செலவு செய்வதன் மூலம் ஏராளமான பணமும் வீணாகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மும்பையில் ஐ.பி.எல். நிறுவனத் தலைவர் பிரிஜேஷ் பட்டேல் தலைமையில் ஐ.பி.எல். உயரதிகாரிகள் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

முன்னைய தொடர்களில் முறையற்ற பந்து கணிப்பதில் நடுவர்களின் செயற்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாகின. இப்பிரச்சினை தொடர்பாக குழுக் கூட்டத்தில் முழுமையாக விவாதிக்கப்பட்டது.

இதன் முடிவில் ஐ.பி.எல். 2020 தொடரில் முறையற்ற பந்துகளை கண்காணிக்க சிறப்பு நடுவரை நியமிக்க அதன் உயரதிகாரக் குழு முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது ரி - 20 போட்டியில் பங்களாதேஷுக்கு இந்தியா பதிலடி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி, 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி, முதல் போட்டியில் அடைந்த தோல்விக்குப் பழி தீர்த்துள்ளது.

ராஜ்கோட் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, ஆறுதல் அளிக்கும் ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்டது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான லிடொன் தாஸ் மற்றும் மொஹமட் நய்ம் ஆகியோர் இணைந்து 60 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துக் கொண்டனர்.

இதன்போது, லிடொன் தாஸ் 29 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய சௌமியா சர்கார், மொஹமட் நய்ம்முடன் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் இணைந்து 23 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்த வேளை, மொஹமட் நய்ம் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சௌமியா சர்கார் ஒருபுறமிருக்க அடுத்து களமிறங்கிய முஷ்பிகுர் ரஹ்மான் 4 ஓட்டங்களுடன் ஏமாற்ற அடுத்ததாக சௌமியா சர்காரும் 30 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து மொஹமதுல்லா 30 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, அஷிப் ஹொசைன் ஆறு ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு மொசெடக் ஹொசைன் ஆட்டமிழக்காது 7 ஓட்டங்களுடனும், அமினுல் இஸ்லாம் ஆட்டமிழக்காது 5 ஓட்டங்களுடனும் களத்தில் இருக்க, பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது இந்தியா அணியின் பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 2 விக்கெட்டுகளையும், வொஷிங்டன் சுந்தர், காலீல் அஹமட் மற்றும் தீபக் சஹார் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியா அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்டது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரோஹித் சர்மா மற்றும் ஷிகர் தவான் ஆகியோர் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக்காக 118 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் ஷிகர் தவான் 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய கே.எல். ராகுல், ரோஹித் சர்மாவுடன் ஜோடி சேர்ந்தார்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடி வந்த ரோஹித் சர்மா 85 ஓட்டங்கள் பெற்றிருந்தவேளை ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய ஸ்ரேயஸ் ஐயர், கே.எல். ராகுலுடன் ஜோடி சேர்ந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

கே.எல். ராகுல் ஆட்டமிழக்காது 8 ஓட்டங்களுடனும், ஸ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களுடனும் களத்தில் இருக்க, 15.4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்திய அணி, வெற்றி இலக்கைக் கடந்தது. இதனால் இந்திய அணி, 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை, இந்தியா 1–1 என சமநிலைப் படுத்தியுள்ளது.

இதன்போது பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அமினுல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளை சாய்த்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்ட அணித் தலைவர் ரோஹித் சர்மா தெரிவு செய்யப்பட்டார்.

அவர், இப்போட்டியில் 43 பந்துகளைகளை எதிர்கொண்டு 6 சிக்ஸர்கள், 6 பவுண்ரிகள் அடங்களாக 85 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இரு அணிகளுக்கிடையிலான தொடரின் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது ரி–20 போட்டி, நாளை நாக்பூரில் நடைபெறவுள்ளது. (ஐ)




# ரக்பி உலகக் கிண்ணத்தை வென்று திரும்பிய தென்னாபிரிக்க அணிக்கு உற்சாக வரவேற்பு




ரக்பி உலகக் கிண்ணத்தை வென்று நாடு திரும்பிய தென்னாபிரிக்க அணிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜப்பானில் நடைபெற்ற ரக்பி உலகக் கிண்ணாத் தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்திய தென்னாபிரிக்க அணி, சாம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

சொந்த நாடு திரும்பிய தென்னாபிரிக்க அணிக்கு, அந்நாட்டு மக்கள் ஆட்டம் பாட்டத்துடன் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வெற்றிக் கிண்ணத்தை ஏந்தியபடி பேருந்தின் மீது அமர்ந்து வந்த அணியினரை ஏராளமானோர் திரண்டு வாழ்த்தினர்.

## மூன்று வாக்காளர்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையம்

மட்டக்களப்பு, நவ. 09

மட்டக்களப்பு – மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மூன்று பேருக்கான வாக்குச்சீட்டுக்கள் எதிர்வரும் 15ஆம் திகதி இந்துக் கல்லூரியின் வழங்கல் பிரிவில் இருந்து எடுத்து சென்று வவுணதீவு வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து மறுநாள் மாந்தீவுக்கு எடுத்து செல்லப்படவுள்ளன.

மாந்தீவுக்கு இயந்திரப்படகு மூலமாக வாக்குச் சீட்டுக்கள் எடுத்துச் செல்லப்பட்டு வழமையான நேரத்துக்கு ஆரம்பித்து மாலை 5 மணிக்கு வாக்கெடுப்பு முடிவடையும் எனத் தெரிவத்தாட்சி அலுவலர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

மாவட்டத்தில் மிகவும் வாக்காளர் குறைந்த வாக்கெடுப்பு நிலையமாக இந்த வாக்களிப்பு நிலையம் இருக்கும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# தேர்தலுக்கு முன்பே சூடு நடத்துவோர் ஆட்சியைப் பிடித்தால் எப்படி நடப்பர்?

## கேள்வி எழுப்புகிறார் பிரதமர் ரணில்



கொழும்பு, நவ. 09

தேர்தலுக்கு முன்னரே மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொள்கின்றவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினால் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை – தெனியாய பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தலுக்கு முன்னதாகவே எஸ்.பி.திஸநாயக்கவின் பாதுகாவலர்கள், நிராயுதபாணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள்.

இவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்பே இவ்வாறு செயற்படுகின்றார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டார்களாயின் அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதை மக்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், அனைவரது எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய தேர்தல் என்பதை மக்கள் மறக்கக்கூடாது.

எம்மால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் சுதந்திரத்தையும் தொடர்ந்து முன்நோக்கிக் கொண்டு செல்வதா? அல்லது இருண்ட யுகமொன்றுக்குள் செல்வதா? என்று மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

எமது அரசு என்ன செய்தது என்று சிலர் கேட்கின்றார்கள். சமுர்த்திக் கொடுப்பனவு தொகையை அதிகரித்தோம். மகாபொல புலமைப்பரிசில் தொகையையும் அதிகரித்தோம். பாடசாலை மாணவர்களுக்கான சுரக்ஷா காப்புறுதியை அறிமுகம் செய்தோம். ரன்மாவத் திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைக்கப்பட்டன.

கம்பெரலிய வேலைத்திட்டத்தின் ஊடாகக் கிராமங்களிலும் அபிவிருத்தியை ஏற்படுத்தினோம். இந்த நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரு மடங்கினால் அதிகரித்தோம். அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் புதிய பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணித்தோம். ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தோம்.

பாடசாலைக் கல்வி மற்றும் உயர் கல்வியின்தரத்தைமேம்படுத்தினோம். பல்கலைக்கழகத்தில் புதிததாக 23 பீடங்களை உருவாக்கினோம்.

அதேபோன்றுசுயாதீனஆணைக் குழுக்களை அமைத்தோம். நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு என்பவற்றின் சுயாதீனத்துவத்தை உறுதிப்படுத்தினோம்.

வெள்ளை வான் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்தோம்.

அதன் காரணமாகவே இன்று நியாயமான தேர்தலொன்று நடத்தக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது– என்றார். (ஐ)


அமரர் நடராஜா ரவிராஜ் நினைவுப் பேருரை -2019

போரின் முடிவும் போராட்டத் தொடர்ச்சியும்

-: நிகழ்த்துபவர் :-
அருட்தந்தை. S.J இமானுவல்
(தலைவர், உலகத்தமிழர் பேரவை)

காலம் : 10.11.2019 ஞாயிற்றுக் கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : தென்மராட்சி கலாசார மண்டபம்
(சிவன் கோவிலடி, சாவகச்சேரி.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- ஏற்பாட்டுக் குழு

நினைவு மீட்பில்.......
அகவணக்கம்
ஈகச்சுடரேற்றல்
மலர் மாலை அணிவித்தல்
வரவேற்புரை
திருமதி. மகேந்திரன் நிர்மலா
(சமூக செயற்பாட்டாளர்)
தலைமையுரை
சட்டத்தரணி. கேசவன் சயந்தன்
(முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாணசபை)
ஆத்மசாந்தியுரை
சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு, வாரிவனேஸ்வரர் சிவன் கோவில்)
நினைவுப் பேருரை
போரின் முடிவும் போராட்டத் தொடர்ச்சியும்
அருட்தந்தை. S.J இமானுவல்
(தலைவர், உலகத்தமிழர் பேரவை)
விருது வழங்கல்
சிறப்புரை
கௌரவ. இராஜவரோதயம் சம்பந்தன்
( தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு )
நன்றியுரை
உயர்திரு. ம. மரியபேர்னார்ட்

Print@Mickey-Chava
021-2-27-17-07

## திருக்கேதீஸ்வரத்தில் வழிபட்ட சஜித்!

மன்னார், நவ. 09

புதிய ஜனநாயகக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்று மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஆலய நிர்வாகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர், அங்கு நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டட நிர்மாணப் பணிகளையும் பார்வையிட்டார்.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் உடனிருந்தார். (ஐ)





யாழ்ப்பாணத்தில்!
SPECIAL OFFERS
கற்பகவனம் 2
எழுதுமட்டுவாழ்

1 ஏக்கர் - 16 பரப்பு
40 தென்னை 10-15 மாமரம்
40-60 தேக்கு கல் இருக்கை 01 தொகுதி
20 கஜூ மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்

2 ஏக்கர் - 32 பரப்பு
80 தென்னை 20-30 மாமரம்
80-90 தேக்கு கல் இருக்கை 01 தொகுதி
40 கஜூ மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்

5 வருட பராமரிப்பு
15 அடி அகலப் பாதை
24 மணிநேர பாதுகாப்பு
மாதாந்த பராமரிப்பு அறிக்கை
விடுமுறை வீட்டிற்கான இடவசதி
துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொதுவிடுதி ~ உணவகம் ~ உடற்பயிற்சிக்கூடம் ~ நீச்சல் தடாகம்
விளையாட்டுத்திடல் ~ நடைப்பயிற்சிக்கான பாதை ~ மீன்பிடி குளம்
முந்திரிகைத் தோட்டம் ~ மூலிகைத் தோட்டம்





சி. அனுராஜ்
உரிமையாளர்,
விற்பனையாளர்.

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
Reg. No.: PV 115306

## காட்டுயானை தாக்கி இருவர் உயிரிழப்பு!

அம்பாறை, நவ. 09

அம்பாறையில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்துள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை – மங்களகம, கொஹொம்பகஸ்தலாவ பகுதியில் காட்டு யானையின்தாக்குதலுக்கு இலக்காகி 59 வயதுடையவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம்இரவு 10 மணியளவில் அந்த நபர் வீட்டில் இருந்த நிலையிலேயே யானையொன்று வீட்டுக்குள் புகுந்து தாக்கியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பள்ளிமடு, மக்குலானை பகுதியில் யானைகளின் அட்டகாசத்தினால் கட்டடங்கள் மற்றும் மரங்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி ஜனாதிபதியை உருவாக்கமுடியாது

## அதனை இனவாதிகளுக்கு உணர்த்துவோம் என்கிறார் ரிஷாத்

மன்னார், நவ. 09

சிறுபான்மைச் சமூகத்தின் ஆதரவு இல்லாமல் நாட்டில் ஜனாதிபதி ஒருவரை உருவாக்கவே முடியாது என்ற செய்தியை இனவாதிகளுக்குத் தெளிவாகச் சொல்லும் தேர்தலாக இந்த ஜனாதிபதித் தேர்தல் அமைய வேண்டும் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டின் எதிர்காலத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் இந்த தேர்தலில் நீங்கள் அமைதியாகவோ, அலட்சியமாகவோ இருந்துவிடவேண்டாம்.

கடந்த காலங்களில் எமது மதத் தலங்களை நொருக்கியவர்கள், உரிமைகளைப் பறித்தெடுத்தவர்கள், வியாபார நிலையங்களை நாசப்படுத்தியவர்கள், நிம்மதியைத் தொலைத்தவர்கள் அனைவரும் கோட்டாபயவுக்கு பின்னால் அணி திரண்டுள்ளனர்.

இவர்களின் கனவுகளைச் சிதைப்பதற்காகவே சிறுபான்மைத் தலைவர்களான நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். எனவே இனவாதிகளின் சதிகளை முறியடிப்பதற்கும் தடுப்பதற்கும் நீங்கள் எம்முடன் கைகோர்த்து சஜித்தை வெற்றியடையச் செய்யுங்கள்.

சிறுபான்மை மக்கள் அனைவரும் ஓரணியில் திரள்வோமேயானால் சஜித் பிரேமதாஸ பாரிய வெற்றியைப் பெறுவார். நியாயத்துக்கும் அநியாயத்துக்குமான இந்தத் தேர்தலில் நியாயம் வெல்லவேண்டும், நீதி வாழவேண்டும்.

இனவாதிகள் தமது அணிதான் வெற்றிபெறுமென்று தம்பட்டம் அடிக்கின்றார்கள். நமது சமூகத்தை அழிப்பதற்கு




அத்தனை முயற்சிகளையும் செய்துவிட்டு இப்போது வாக்குக் கேட்டு வருகின்றார்கள். போதாக்குறைக்கு அவர்களது முகவர்களை வடக்கு –கிழக்குக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

நாங்கள் ஊர் ஊராக, வீடு வீடாக வந்து வாக்குக் கேட்கமுடியாது போய்விட்டாலும் நீங்கள் உணர்ந்து வாக்களியுங்கள். சஜித் பிரேமதாஸவை வெல்ல வைப்பதன் மூலம் எமது எதிர்காலம் எமது மண்ணின் எதிர்காலம் சிறக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம்–என்றார். (ஐ)

# பிரிவினைவாதக் கோரிக்கைகளை சஜித் பிரேமதாஸ நிறைவேற்றுவார்

## குற்றம் சாட்டுகிறார் கோட்டாபய



கொழும்பு, நவ.09

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரித்த ஜனாதிபதி வேட்பாளர் அவர்களது பிரிவினைவாதக் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் எனத் தான் நம்புகிறார் என்று பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரிப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் நாடாளுமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ இல்லை. ஆனாலும் எனது தோள்களில் சுமந்துள்ள கடமைகளை நிறைவேற்றுவேன்.

அரசின் அமைச்சுப் பதவியில் இருக்கும்போது செய்ய முடியாதவற்றை புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர், செய்வேன் என வாக்குறுதி அளிப்பது நம்பமுடியாத அபத்தமானது.

எஸ்.பி. திஸநாயக்கவின் மெய்ப்பாதுகாவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு விவகாரத்தில், யார் குற்றம் இழைத்திருந்தாலும் சட்டம் தனது கடமையைச் செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்த ஜனாதிபதி வேட்பாளர் அவர்களது பிரிவினைவாதக் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என நான் நம்புகின்றேன்.

சுற்றுலாத்துறையின் ஊடாக அதிக வருமானத்தை பெற முடியும். எனவே அதனை மேலும் அபிவிருத்தி செய்து அதனூடாக வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும்.

இதற்காக ஏனைய நாடுகளில், இலங்கையை முதலில் பிரபலப்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

# கூட்டமைப்பின் கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்கவேமாட்டார்!

## முன்னாள் வடக்கு ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள கோரிக்கையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவிலுள்ள சுதந்திரக் கட்சி–பொதுஜனபெரமுனஇணைந்த அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கு – கிழக்கு மக்கள் சுதந்திரத்துக்குப் பின்னரும் பல ஆண்டுகள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

எனினும் தமிழ்த் தலைவர்கள் தமக்கான சுக போகங்களை அனுபவித்து சொகுசாகவே வாழ்கின்றனர். அவர்கள் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.



வடக்கில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் மாத்திரமே அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்பை ஏற்று தமிழ் மக்களுக்குச் சேவை செய்தார்.

அதன் பின்னர் எந்த தமிழ்த் தலைமைகளும்அரசுடன்இணைந்து செயற்படவில்லை. இதனால் அந்த மக்களுக்கு வருமானம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றியில் பாதகமான நிலைமையே ஏற்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று மனித உரிமை மீறல் பற்றிப் பேசுபவர்கள் அந்த மக்களின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வது குறித்து ஒருபோதும் சிந்திக்கவில்லை.

வடக்கு–கிழக்கு மக்களை வறுமை நிலைக்குத் தள்ளிய யுத்தத்தை யார் ஆரம்பித்ததுஎன்று அந்தமக்களுக்கு தெரியும். அதேபோன்று மஹிந்த ராஜபக்ஷ தான் யுத்தத்தை நிறைவு செய்து, அபிவிருத்திகள் எதுவுமே அற்று கிடந்த வடக்கில் சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்தார் என்பதும் மக்களுக்குத் தெரியும்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கில் மஹிந்த ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படவில்லை. கடந்த 4 வருடங்களில் இந்த அரசும் எதையுமே செய்யவில்லை.

எனவே, இழந்த அபிவிருத்திகளை மீளப் பெறுவதற்குக் கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் – என்றார். (ஐ)

உ
அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்
"வித்தகம்"



"கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்"

காலம்:- 12.11.2019 செவ்வாய் மாலை 5.00 மணி
இடம் :- கம்பன் கோட்டம், நல்லூர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல் : திரு. சி.வெற்றிவேலாயும் (நிர்வாக இயக்குநர்-வலம்புரி)
திரு. எஸ்.குகநாதன் (தலைவர்-டான் ரி.வி.)
கடவுள் வாழ்த்து : திரு. ம.தயாபரன்
தலைமையுரை : கலாநிதி ரி. கணேசலிங்கம் (அரசியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

கருத்துக்களம்
ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்களும்

நெறி செய்வோர்
கவிஞர் சோ.பத்மநாதன்
(முன்னாள் அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை)

கம்பவாரிதி இ.ஜெயராஜ்
(ஸ்தாபகர், கம்பன் கழகம்)

திரு.சு.டிவகலாலா
(முன்னாள் செயலர், வடகிழக்கு மாகாண கல்விஅமைச்சு)

கருத்துரைப்போர்
கலாநிதி எஸ். சிவகுமார்
(பொறியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

திரு.சி.தவராசா
(முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர், வடமாகாணசபை)

திரு.க. அருந்தவபாலன்
(ஊடகப்பேச்சாளர், தமிழ் மக்கள் கூட்டணி)

திரு.ந. வித்தியாதரன்
(ஆசிரியர், காலைக்கதிர் )

## வடமாகாண

# மரநடுகை மாதம்

## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**



**மாண்ட வீரர் கனவு பலிக்க
மழையின் பொழிவில் தமிழ் மண் குளிக்க...**

**ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்**

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**TAMIL NATIONAL GREEN ORGANIZATION**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2019 இல் வெளியிடப்பெற்றது.